# இந்தியப் பிரதமராக மொரார்ஜி பதவி ஏற்ருர்!


பக்கங்கள் 8 விலை சதம் 40

# ஈழநாடு

The EELANADU

மலர்: 19 பங்குனி 12 ரபி ஆகிர் 4 இதழ்: 43
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 25-3-77



அண்ணு சோயாப் பவுடர்
இது ஓர் சக்திமிக்க பானம் ஆரோக்கிய வாழ்விற்கு புரத சத்து நிறைந்த அண்ணு சோயாபானத்தைபருகுங்கள் சகலவித அளவுகளிலும் எல்லா இடங்களிலும் பெற்றுக்கொள்ளலாம். இன்றே அண்ணு சோயாப் பவுடரை வாங்கி பணத்தை மிச்சப் படுத்துங்கள்.
விநியோகஸ்தர்கள்:
அண்ணு தொழிற்சாலை
இணுவில்.
தொலைபேசி: 7412


புதுடில்லி மார்ச் 24
இந்தியாவின் புதிய பிரதம மந்திரியாகதிரு. மொரார்ஜி தேசாய் இன்று பதவி ஏற்ருர்.

பிரதமராகப் பதவி ஏற்பதற்கு முன்பதாக ஜனதா கட்சிலோகசபை உறுப்பினர்கள் கூடி திரு. மொரார்ஜி தேசாயைக் கட்சித்தலைவராக ஏகமனதாகத் தெரிவு செய்தனர்.

இதையடுத்து பிரதம மந்திரி பதவியை ஏற்கும்படிகோரி பதில் ஜனதிபதி திரு. ஜெட்டி திரு. மொரார்ஜி தேசாய்க்கு அழைப்புவிடுத்தார். இந்த அழைப்பை ஏற்றுக் கொண்ட திரு. தேசாய் ஜனதிபதி மாளிகைக்குச் சென்று பதவிப் பிரமாணம் எடுத்துக்கொண்டார்.

சுதந்திர இந்தியாவின் வரலாற்றில் காங்கிரஸ் கட்சியைச் சேராத ஒருவர் இந்தியப் பிரதமராகப்பதவி ஏற்பது இதுவே முதல் தடவையாகும்.

இந்திய லோகசபைக்கு புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட ஜனதா கட்சி உறுப்பினர்கள் நேற்று இந்திய ஆட்சிமன்ற மண்டபத்தில் கூடி திரு.


[8-ம் பக்கம் பார்க்க]


அதிகாலை 3-30க்கு மூதறிஞர் செல்வாவிற்கு

# அவசர சத்திர சிகிச்சை:

# ஆபத்தைத் தாண்டினர்!

## தலையிலிருந்து உறைந்த இரத்தக் கட்டிகள் நீக்கம்



யாழ்ப்பாணம், வெள்ளி

நேற்று அதிகாலை மூன்றரைமணியளவில் நடந்த அவசர சத்திர சிகிச்சையின் பின் மூதறிஞர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் ஆபத்தான கட்டத்தைக் கடந்துவிட்டார் என்று வைத்தியர்கள் தெரிவித்தனர்.

பின்தலைக்குள் இரண்டு பக்கத்திலும் உறைந்திருந்த இரத்தக் கட்டிகள் சத்திரசிகிச்சையின்போது அகற்றப்பட்டன.

### நள்ளிரவில் நிபுணர்கள் வந்தனர்

கொழும்பிலிருந்து வந்த மூளைநரம்பு சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் கப்ரால் மற்றும் வைத்திய நிபுணர்களான டாக்டர் விக்கிரமசிங்கா, டாக்டர் குணசிங்கா ஆகியோர் இந்த அவசர சத்திரசிகிச்சையை அரைமணி நேரத்துக்குள் செய்து முடித்தனர்.

கொழும்பிலிருந்து இலங்கை விமானப் படையின் விசேஷ விமானத்தில்புதன் நள்ளிரவுபலாலிவிமான நிலையத்தில் வந்திறங்கிய வைத்திய நிபுணர்கள் 12-45க்கு யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிக்கு வந்துசேர்ந்தனர்.

### உறைந்திருந்த இரத்தக்கட்டிகள்

உடனடியாகவே மூதறிஞர் செல்வநாயகத்தைப் பரிசோதித்த டாக்டர்கள் முன்னர் எடுக்கப்பட்ட 'எக்ஸ்றே' படங்களையும் பரிசீலனை செய்தனர். பின்னர் 15-ம்வார்ட்டிலிருந்து திரு. செல்வநாயகம் 'எக்ஸ்றே' பகுதிக்குக் கொண்டுசெல்லப்பட்டார். மீண்டும் புதிதாக 'எக்ஸ்றே' எடுத்துப் பார்த்த பின்னர் பின் தலையில் உறைந்துள்ள இரத்தக் கட்டிகளை அகற்ற வேண்டும் என்று வைத்திய நிபுணர்கள் தெரிவித்தனர்.

சத்திரசிகிச்சை மூலம் இரத்தக் கட்டிகளை அகற்றுவதற்குத் திருமதி செல்வநாயகத்தின் சம்மதம் பெறப்பட்டது.

### அரைமணி நேரத்தில் முடிந்தது

சத்திரசிகிச்சை அரைமணி நேரத்தில் முடிவடைந்தது. பின் தலையில் துவாரம் ஏற்படுத்தி அத்துவாரத்தின் வழியாக உறைந்திருந்த இரத்தக்கட்டிகள் இருபக்கத்திலிருந்தும் வெளியே எடுக்கப்பட்டதாம்.

நேற்றுக்காலையில் விழுந்ததால் மட்டும் இந்த இரத்தக் கட்டிகள் ஏற்படவில்லையென்றும் இதற்கு முன்னரும் திரு. செல்வநாயகம் விழுந்ததால் இரத்தம் உறைந்து கட்டிகளாகி இருந்தனவென்றும் இந்த இரத்தக் கட்டிகள் அகற்றப்பட்டுவிட்டதால் இனி அவர் தெளிவாகவும்


(8-ம் பக்கம் பார்க்க)


### கருத்தரங்குகள் ரத்து

யாழ்ப்பாணம், வியா.

தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் சுகவீனத்தையடுத்து இன்று காங்கேசன்துறைத் தொகுதியிலும் இணுவிலிலும் நடைபெறவிருந்த தமிழர் விடுதலைக் கூட்டணிக் கருத்தரங்குகள் ரத்துச்செய்யப்பட்டுள்ளன. (உ)

### தங்கத்துரை வந்தார்

யாழ்ப்பாணம், வியா.

மூதூர் இரண்டாவது எம். பி. திரு. அ. தங்கத்துரை உட்பட தமிழர் விடுதலைக் கூட்டணி ஆதரவாளர்கள் பலர் விசேட பஸ் ஒன்றில் தலைவர் திரு. செல்வநாயகத்தின் சுகவீனம் பற்றிய தகவல் கிடைத்ததும் யாழ்ப்பாணம் வந்துள்ளனர். (உ)

### 'தேர்தல் அமைதியான புரட்சி'

புதுடில்லி, மார்ச் 24

நடந்துமுடிந்த லோக சபைத்தேர்தல் ஒரு 'அமைதியான புரட்சி' என்று ஜனதா கட்சித் தலைவர் திரு. மொரார்ஜி தேசாயும் ஜனநாயக காங்கிரஸ் தலைவர் திரு. ஜெகஜீவன்ராமும் வர்ணித்துள்ளனர். (இ)

### "தந்தையைப் பார்க்க திரளவேண்டாம்"

#### 'அமிர்' வேண்டுகோள்

சந்திர சிகிச்சையின்பின் யாழ். பெரியாஸ்பத்திரி மூளை, நரம்புச் சிகிச்சைப் பிரிவான பதினுரும் வார்டில் தீவிரகண்காணிப்புக்காக அனுமதிக்கப்பட்டிருக்கும் மூதறிஞர் செல்வநாயகத்தைப் பார்ப்பதற்காக வரவேண்டாமென்றும் பார்க்க வருபவர்கள் சுவாசிப்பதன் மூலம் கூட தந்தையின் நோய் அதிகரிக்கலாமென்றும் வைத்தியர்கள் தெரிவித்திருக்கிருர்களென்றும், தயவுசெய்து தந்தையைப் பார்க்க ஆஸ்பத்திரிக்கு வரவேண்டாமென்றும் கூட்டணிச் செயலதிபர் திரு.அ. அமிர்தலிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.


### தேவை

#### விளம்பரம் சேகரிப்பவர்கள்

(ADVERTISEMENT CANVASSERS)

யாழ்நகரிலும் மற்றைய இடங்களிலும் விளம்பரம் சேகரிக்கக்கூடியவர்கள் தேவை. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். பிரயாண அலவன்ஸும் கமிஷனும் வழங்கப்படும்.

வயது, தகைமை, அனுபவம், வர்த்தக நிறுவனங்களுடன் உள்ள தொடர்புகளைக் குறிப்பிட்டு 31-3-77க்கு முன் கிடைக்கக்கூடியதாக விண்ணப்பிக்கவும்.

நிர்வாகி,
ஈழநாடுலிமிட்டெட்,
யாழ்ப்பாணம்.

# சிறுவிளம்பரம்

### கல்வி

1977 ஆவணியில் பரீட்சை எடுக்கவுள்ள H. N. C. E. வகுப்பு மாணவர் கணிதம், பௌதிகம், இரசாயனம், உயிரியல் பாடங்களும், O/L வகுப்பார் எண் கணிதமும் சிறந்த ஆசிரியர்களிடம் கற்க ஒழுங்கு செய்து தரப்படும். தொடர்பு கொள்க. சி. தயானந்தசிவம், சிவாகல்வி நிலையம், உபதபாற் கந்தோர் இல்லம், நீராவியடி. 5759

G. C. E. A/L விஞ்ஞான பாடங்கள் N.C.G.E. விஞ்ஞானம் கணிதம் H.N.C.E. விஞ்ஞானம், கணிதம் வர்த்தகவியல், ஆங்கிலம், பேச்சு ஆங்கிலம்- சிறந்த பட்டதாரி ஆசிரியர்களால் கற்பிக்கப்படும். இடம்: கில்னர் மண்டபம், காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். தினம் 4--6 மணிக்கு அல்லது ஞாயிறு 10 மணிக்கு பதிவு செய்யவும். 5766

### தேவை

யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு பிரபல ஸ்தாபனத்துக்கு பைப்புகள் இணைக்கவும், பழுது பார்க்கவும் யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் இத்துறையில் பயிற்றப்பட்டு சித்தியடைந்த, நல்ல அனுபவம் வாய்ந்த ஒருவர் உடன் தேவை. எவ்வளவு காலம் இத்துறையில் அனுபவம் என்பதையும் நற்சாட்சிப் பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 5763, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 5763

ரேயல் டிஸ்பென்சறிக்கு ஆங்கில அறிவுள்ள பெண் உதவியாளர் உடன் தேவை. நேரில் வரவும் ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம். 5765

சித்திரவேலை செய்யக்கூடிய அனுபவமுள்ள பெண்கள் தேவை. உடன் நேரில் வரவும். நிலாம் ஸ்டோர்ஸ், 7, ஜும்மா மொஸ்க் லேன், பெரியகடை, யாழ்ப்பாணம். 5776

யாழ்ப்பாணத்தில் இருக்கும் பிரபல்ய தச்சுத் தொழிற்சாலை ஒன்றுக்கு வேலைதெரிந்த தொழிலாளிகளும். வேலைபழக விரும்புபவர்களும் உடனடியாகத் தேவை. நேரடியாகத் தொடர்புகொள்க: மெற்றில் தச்சுத்தொழிற்சாலை. 93, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். 5778

### விற்பனைக்கு

கிளிநொச்சிப்பகுதியில் உருத்திரபுரத்திற்கு அருகாமையில் இரண்டுபோகம் வேளாண்மை செய்யக்கூடிய 16 ஏக்கர் நெற்காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல: 5769, C/o ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம். 5769

### கல்வி

G C E A/L விலங்கியல் வகுப்பு உடன் ஆரம்பமாகும் விபரங்களுக்கு பிரான்சிஸ் கில்னர் மண்டபம் காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். 5767

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம் சோலைவரி 1-ம் கந்தாயம் 1977

1977 ம் ஆண்டு 1-ம் கந்தாயத்திற்கான சோலைவரிப் பணம் 31-3-1977-ம் திகதி பி. ப. 3-00 மணிக்கு முன்னதாக மாநகராட்சி மன்ற அலுவலகத்தில் செலுத்தப்பட வேண்டும். இத்திகதிக்குப் பின்னர் செலுத்தப்படும் வரிப் பணத்திற்கு மேலதிகமாக 10% வெளியாத்துப் பணம் அறவிடப்படும்.

காசோலைகள், காசுக்கட்டளைகள், அஞ்சற் கட்டளைகள் முதலியன யாழ்ப்பாண மாநகர ஆணையாளரின் சார்பில் தபாற்சேவையில் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்க்கும் பொருட்டு முன் கூட்டியே அனுப்பப்படல்வேண்டும். அத்துடன் வரியிறுப்பாளர்கள் ஆதனத்தின் தற்போதைய வரி மதிப்பு இலக்கமும், வீதியின் பெயர், வட்டார இலக்கம் முதலிய விபரங்களுடன் வரிப்பணத்தை அனுப்பும்படி வேண்டப்படுகின்றனர்.

க. சிவஞானம்.
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
23-3-77. 5779

## மணவாளக் கோலவிழா

ஆனைக்கோட்டை, வெள்ளி
வட்டுக்கோட்டை மூன்றும் பனைவயிரவர் கோவிலின் மணவாளக் கோலவிழா இன்று நடைபெறவுள்ளது.

காலை சகஸ்திர சங்காபிஷேகமும் பகல் மகேஸ்வரபூஜையும் இரவு. கதாகாலஷேபமணி திரு. தா. பொன்னம்பலத்தின் கதாகாலட்சேபமும் இடம் பெறும்.

நவாலி சிந்தாந்தமணிவிநாயகர் ஆலயத்திலும் இன்று மணவாளக்கோலவிழா நடைபெறுகிறது.

மாலை அஷ்டோத்தரசங்காபிஷேகமும், இரவு வில்லிசை நிகழ்சியும் இடம் பெறும் (அ)

## 'மாணவர் செய்திட்டம்'

யாழ்ப்பாணம், வெள்ளி
'மாணவர் செய்திட்டம்' என்ற நூலை மில்க்வைற் ஸ்தாபன அதிபர் திரு. க. கனகராசா இலவசமாக வெளியிட்டுள்ளார்.

திரு. க. இ. குலரத்தினம் ஆக்கியுள்ள இந்நூல் பாடசாலை மாணவர்களைச் சேரிதிருத்துதல், குளங்கள் ஆழமாக்குதல் கிராமப்புனரமைப்புச் செய்தல் முதலிய செயல் திட்டங்களை ஊக்கப்படுத்து முகமாக வெளியிடப்பட்டுள்ளது. (க-அ)


மலேஷியன் கை மார்க்
**சாம்பிராணி**
கிடைக்குமிடம்:
சென்ற் அந்தனிஸ்
ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்
லிமிட்டெட்,
கொழும்பு-10
போன்: 24261—5


### பிரதமருடன் பேச்சு நடத்தினாலும்

# கூட்டணித்தலைவர்கள் நம்மை கைவிடமாட்டார்கள்

## தொல்புரத்தில் காசி ஆனந்தன்

சுழிபுரம், வியாழன்
தமிழ்மக்கள் முக்கியமாக இளைஞர்கள் தமிழ் இனத்துக்காக போராடுகிறார்கள். தீவிரமாகவும் திடசங்கற்பத்துடனும் போராடுகிறார்கள். இச்சந்தர்ப்பத்தில்தான் பிரதமர் நமது தலைவர்களைப் பேச்சுவார்த்தைக்கு அழைத்திருக்கிறார். எனினும் நம்மை நமது தலைவர்கள் கைவிடமாட்டார்கள் என்ற பூரண நம்பிக்கை எமக்குண்டு.

இவ்வாறு கவிஞர் காசி ஆனந்தன் தொல்புரத்தில் நடைபெற்ற அமரர்கள் ஜி.ஜி. பொன்னம்பலம், திருச்செல்வம் ஆகியோரின் அஞ்சலிக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார். அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

சிங்கள மொழி எம்மவர்களுக்குள் நன்கு ஊடுருவியுள்ளது. தேநீர் அருந்தும் நம்மவர்கள் காட்டை என்றும். லக்சல. சலுசல என்றும் சிங்களச் சொல்லுகளையே கூறி வருகின்றார்கள். இதன்விளைவு எம்மை நாம் அழிப்பதாகவே உள்ளது.

தலைவர்களை நாம் நம்புகின்றோம். தந்தை செல்வா, அமிர் அண்ணை மேல் என்றும் எமக்கு நம்பிக்கையுண்டு. தமிழ் ஈழம்தான் எமது மூச்சு. அதை அடைய எல்லோரும் பாடுபடுவோம்.

தமிழர் கூட்டணி செயல் அதிபர்களில் ஒருவரான திரு. அ. அமிர்தலிங்கம் பேசுகையில் கூறியதாவது:-

முந்நூற்றிஐம்பது ஆண்டுகளாக எமக்கு ஏற்படாத ஆபத்து சென்ற முப்பது ஆண்டுகளுக்குள் ஏற்பட்டுள்ளது. கிழக்கு மாகாணம் சிங்களக் குடியேற்றத்தினால் பறிபோகின்றது. அமரர் ஜி. ஜி. பொன்னம்பலம் தமிழ்பேசும் மக்களுக்கு ஒற்றுமை, தன்மானம். விடுதலை ஆகிய மூன்றுமே தேவை யென்றார். இவற்றை நாம் அடையப் பாடுபடுவதே நாம் ஜி. ஜி. க்கு செய்யும் அஞ்சலியாகும்.

அமரர் மு. திருச்செல்வம் எமக்காக ஓய்வு ஒழிவு இன்றி ட்ரயல் அட்பார் வழக்கு மூலம் அகில உலகம் முழுவதும் எங்கள் நிலைமையை அறியச் செய்ததை நாம் மறக்கமுடியாது. மலரப்போகும் தமிழ் ஈழம் ஓர் சமதர்ம சமுதாய அமைப்பாக விளங்கும்என்பது உண்மை.

மாவை சேனாதிராஜா. வண்ணை ஆனந்தன், சத்தியசிலன், த. துரைரத்தினம் பா. உ., திரு. ஆ. துரைராஜசிங்கம், சட்டத்தரணி எஸ். விசுவநாதன், திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம், திருமதி நல்லதம்பி உட்பட மற்றும் பலர் பேசினர். (இ)

# இருதினங்கழித்துலொறிகள் வெறுமனே திரும்பின!

நீர்வேலி, வியாழன்
பிரிவு உதவி அரசாங்க அதிபரின் அனுமதிப்பத்திரம் பெற்றிருந்தும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் சீமெந்து பெறமுடியாது பொதுமக்கள் பெரிதும் கஷ்டமடைகின்றனர்.

பலநோக்குக் கூட்டுறவுச் சங்க லொறிகள் இரண்டுதினங்கள் வரிசையில் காத்து நின்றும் சீமெந்து பெறமுடியாத நிலையில் வெற்று லொறிகளாகத் திரும்பி வந்ததைக்காத்து நின்ற மக்கள் கூட்டம் கண்டு ஏமாந்த நிலையில் வீடு திரும்பியது. [அ]

### சென்றல் — சென். ஜோண்ஸ்

# 79-வது கிரிக்கட் போட்டி இன்று ஆரம்பம்

நல்லூர், வெள்ளி
யாழ். மத்திய கல்லூரிக்கும் யாழ். பரியோவான் கல்லூரிக்கும் இடையே நடைபெறவிருக்கும் 79-வது வருடாந்த கிரிக்கெட்போட்டி இன்றும் நாளையும் யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது, தினமும் காலை 10-30 மணியிலிருந்து மாலை 12-30 மணிவரையும், மாலை 1-30 மணியிலிருந்து 3-30மணிவரையும் மாலை 3-50மணியிலிருந்து மாலை 5-35 மணிவரையும் ஆட்டம் நடைபெறும்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி கோஷ்டிக்கு ஏ. சி. பாலசுந்தரமும், யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரிக்கு ஆர். நகுலேஸ்வரனும் தலைமை தாங்குகிறார்கள்.

யாழ் மத்திய கல்லூரி வீரர்கள் விபரம்:

ஆர். நகுலேஸ்வரன் [தலைவர்], எம். எஸ். ரமேஸ், ஏ. ரவீந்திரன், எஸ். ஜே, ரவீந்திரகுமார், சி. ராஜன் தம்பையா ஏ. பகிரதன், எஸ். சிறீஸ்கந்தகுமார், எஸ். கருணாகரன், ஜி. நித்தியானந்தன், ஜி. அனுருத்திரன் எஸ். பீ. பிரேமசந்திரன், ஏ. ஜோ. ராஜ்குமார், எஸ். விக்னராஜா, எஸ். சிறீஸ்கந்தராஜா, ரி. சிறிஸ்கந்தராஜா.

யாழ் பரியோவான் கல்லூரி வீரர்கள் விபரம்:-

ஏ. சி. பாலசுந்தரம் (தலைவர்), எம். வை ஏ. யோசான் ம. எஸ், ரண்டராஜா, எஸ். ஜே. ஜெபரெட்ணம், எல். டி. மகேந்திரா, பி. சாந்தகுமார், ஜெ. ஜெ. ஜெயயேந்திரன் என். ஆர். சோமசுந்தரம், இ. ஜே. ஜெபரெட்னம், என், வசந்தன், எஸ். கரிந்திரன் ஆர். யதுயானந்தன், என். வாமபாகன், ஜே. ஆர். குமாரசாமி. [இ]

## யாழ். கோஷ்டி கண்டி செல்கிறது

யாழ்ப்பாணம், வெள்ளி
மாவட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் கீழ் யாழ்ப்பாணம் கோஷ்டி கண்டிக்கோஷ்டியுடன் மோதவிருக்கிறது.

பேராதனை மைதானத்தில் இப்போட்டி ஏப்ரல்மாதம் 2-ம் 3-ம்திகதிகளில் நடைபெறும். (உ)

## பரத நாட்டிய அரங்கேற்றம்

நல்லூர், வெள்ளி
மானிப்பாய் நாட்டியாலய ஆசிரியை செல்வி விஜேந்தினி ஆசாரத்தினத்தின் மாணவியான செல்வி திருமகள் துரைராஜசிங்கத்தின் [ஜீன்] பரத நாட்டிய அரங்கேற்றம் சனிக்கிழமை மாலை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதமவிருந்தினராக சட்டத்தரணி சி. கனகரத்தினமும் அவரது பாரியாரும் கலந்துகொள்வர். (அ)

## வடமாகாண ஆசிரியர் சங்க சகாயநிதி

யாழ்ப்பாணம், வெள்ளி
வடமாகாண ஆசிரிய சங்க சகாயநிதியின் பதினேழாவது ஆண்டுப்பொதுக்கூட்டம் இம் மாதம் 27ந் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை வண்ணை வைத்தீஸ்வரவித்தியாலய மண்டபத்தில் தலைவர் து. விசுவநாதன் தலைமையில் நடைபெறவிருக்கிறது.

வடமாகாண ஆசிரியர் சங்க சகாயநிதி 1960ம்ஆண்டுஆரம்பிக்கப்பட்டது. 1968ம் ஆண்டுக்கான 18ம் இலக்கப்பாராளுமன்றச் சட்டத்தினால் சட்டரீதியான ஸ்தாபனமாக்கப் பட்டது.

வடமாகாணத்திலுள்ள ஆசிரியர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக இச்சங்கம் அமைந்துள்ளதென்று சொல்லவேண்டும்.

1977ம் ஆண்டு ஜனவரி முதல்தேதியில் நிதியின் இருப்பு ஒன்பதேகால்லட்சம்ரூபாய்க்கு மதிகமானதாகும். இதுவரை உறுப்பினர் 7,69,037 ரூபாய் கடனைப்பெற்றிருக்கின்றனர். இதுவரை வழங்கிய இளைப்பாற்றுச்சகாயம், 3,98,488 ரூபாயாகும். இதுவரைமரணச் சகாயப்பணமாக 1,46,723 ரூபாய் வழங்கப்பட்டது. பலருடைய வேண்டுதலின் பேரில் இரண்டாவது பதிவேடு 75ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது.

## ஹனிமன் பிறந்தநாள் கொண்டாடுவர்

யாழ்ப்பாணம், வெள்ளி
டாக்டர் சாமுவேல் ஹனிமனின் பிறந்தநாள் விழாவையும் வட இலங்கை ஹோமியோபதி சங்கத்தினவருடாந்த பொதுக்கூட்டத்தையும் ஏப்ரல் 10ம் திகதி நடத்துவதென வட இலங்கை ஹோமியோபதி சங்க நிர்வாகசபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது (அ)

## சித்தங்கேணி இ.வி.க. ஆண்டு நிறைவும் பொருட்காட்சியும்

யாழ்ப்பாணம், வெள்ளி
சித்தங்கேணி இளம் விவசாயிகள் கழக முதலாவது ஆண்டு நிறைவுவிழாவும் பொருட்காட்சிவிழாவும் நாளை சனிக்கிழமை மாலை நடைபெறவிருக்கிறது.

கழகத்தலைவர் செல்வன் சு. சோமஸ்கந்தமூர்த்தி தலைமை வகிப்பார்.

வட்டுக்கோட்டை எம்.பி. திரு. ஏ. தியாகராசாவும் மாவட்ட விவசாய விரிவாக்க உத்தியோகத்தர் திரு. நா. சிவமுத்துலிங்கம் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்வர்.

ஆண்டுவிழா சித்தங்கேணி சிவசிதம்பரேஸ்வரர் ஆலய முன்றலிலும் பொருட்காட்சி விழா சித்தங்கேணி மாதர் முன்னேற்றச் சங்கத்திலும் நடைபெறும்.

திரு. க. அருணாசலம், திருமதி சி. தெய்வேந்திரம், செல்வி கு. பங்கஜவல்லி, செல்வி செ. நந்தினி செல்வன் தெ. விக்கினேஸ்வரன் முதலானோர் சிறப்புரையாற்றுவர்.

விவாதமேடை, கிராமிய நடனம், வில்லுப்பாட்டு. ''சாம்பிராணிச்சாத்திரியார்'' என்ற நகைச்சுவை நாடகம் முதலான நிகழ்ச்சிகளும் இடம் பெறும். (உ)

## கேரளத்தில் கருணாகரன் முதல்வர்

புதுடில்லி, மார்ச் 24
கேரள சட்டசபையில் காங்கிரஸ் கூட்டணியின் முதன் மந்திரியாக திரு. கருணாகரன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

முன்னாள் முதன்மந்திரி திரு. அச்சுதமேனனின் மந்திரிசபையில் உள்நாட்டமைச்சராக இருந்த திரு. கருணாகரன் இன்று பதவி ஏற்பார். (இ)

சிறை வைத்ததற்காக

அன்று வெள்ளையர்மீதும் இன்று இந்திராமீதும்

# எனக்கு மனக்கசப்பு இல்லை;

# பி. பி. ஸி. நிருபரிடம் மொரார்ஜி தேசாய்

புதுடில்லி, மார்ச். 24

**இந்திய சுதந்திரப்போராட்டத்தின்போது என்னைச் சிறையில் அடைத்த பிரிட்டிஷார் மீது எனக்கு மனக்கசப்பு ஏற்படவில்லை. அதே போன்று கடந்த 75ம் ஆண்டு என்னைச் சிறையில் அடைத்த திருமதி இந்திராகாந்தி மீதும் எனக்கு மனக்கசப்பு கிடையாது என்று ஜனதாகட்சித்தலைவர் திரு.மொரார்ஜிதேசாய் பி. பி. ஸி. டெலிவிஷன் நிருபர்களுக்கு அளித்த பேட்டியொன்றின் போது கூறினார்.**

ஒழுங்கை நிலைநாட்டுவதற்கு சட்டத்தினுல் எதுவும் செய்து விடமுடியாது. ஒவ்வொரு ஒழுங்கையும் தனக்குத்தானே ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். அதற்குச்சட்டம் பெரும் உதவியாக இருக்குமென்றும் திரு. மொரார்ஜி கூறினுர்.

**துப்பாக்கி முனையில்**

துப்பாக்கி முனையில் நாட்டில் அமைதியை நிலைநாட்டி விடமுடியாது என்றும் அவர் கூறினுர்.

பொருளாதார அபிவிருத்தி பற்றி நாம் நிதானமாகச் சிந்தித்துச் செயலாற்ற வேண்டும் என்றும் அவர் கூறினுர். (இ)

## சர்வாதிகார ஆட்சி நீண்டநாட்கள் நிலைக்காது

### இந்தியத் தேர்தல் குறித்து உலகப் பத்திரிகைகள்

லண்டன், மார்ச் 24

''சர்வாதிகாரம் நீண்ட நாட்களுக்கு நிலைத்திருக்க மாட்டாதென இந்திய மக்கள் எடுத்துக்காட்டி விட்டனர்'' லண்டனிலிருந்து வெளியாகும் கார்டியன் என்ற ஆங்கிலப் பத்திரிகை இந்திய தேர்தல் முடிவு குறித்து வெளியிட்டுள்ள தலையங்கத்தில் தெரிவித்துள்ளது.

**ஜப்பான் பத்திரிகை**

திருமதி இந்திரா காந்தியின் குடும்பத்திட்ட தீவிர அமுல், அவசரகால ஆட்சியில் எதேச்சாதிகாரப் போக்கு திருமதி காந்தி தமது அடுத்த வாரிசாக தமது மகன் திரு. சஞ்சய் காந்தியை மிகவிரைவில் உருவாக்க மிகத் தீவிரமாக முயன்றமை ஆகிய மூன்றுமே காங்கிரஸினதும் திருமதி காந்தியினதும் தோல்விக்கு முக்கிய காரணமாக இருந்ததென்று ஜப்பானிய பத்திரிகை ஒன்று தெரிவித்தது.

**'டெய்லி ரெலிகிராப்' கூறுகிறது**

21 மாத கொடுங்கோன்மை ஆட்சியை இந்திய மக்கள் ஒரேயடியாக நிராகரித்து விட்டனர் என்று 'டெய்லி ரெலிகிராப்' பத்திரிகை கருத்து வெளியிட்டுள்ளது.

**'தமிழ் முரசு' கருத்து**

புதிய லோகசபைத் தேர்தலின் மூலம் இந்திய மக்கள் நாட்டில் புதிய சகாப்தம் ஒன்றை ஏற்படுத்தி விட்டனர் என்று மலேஷியாவில் இருந்து வெளியாகும் 'தமிழ் முரசு' பத்திரிகை கருத்து தெரிவித்துள்ளது.

**'தமிழ் நேசன்**

இந்திய வாக்காளர் தமக்குத் தேவையான அரசை நிதானத்துடன் தெரிவு செய்துள்ளனர் என்று மலேஷியாவின் மற்றொரு தமிழ்ப் பத்திரிகையான 'தமிழ் நேசன்' தெரிவித்துள்ளது.

**மலாய்ப் பத்திரிகை**

திருமதி இந்திரா காந்தியின் தோல்வி எதிர்பார்க்காத ஒன்றல்ல. ஆனுல் எதிர்பார்க்காத வகையில் அவர் பெருந்தொகை மேலதிக வாக்குகளால் தோற்கடிக்கப் பட்டுள்ளார் என்று மலேஷியாவின் மலாய் மொழி பத்திரிகை தெரிவித்துள்ளது.

**சிங்கப்பூர்**

இந்திராவின் புதல்வர் சஞ்சய் காந்தியின் நடவடிக்கையும் நெருக்கடி நிலையுமே திருமதி இந்திராவின் தோல்விக்கு முக்கிய காரணங்கள் என்று சிங்கப்பூரிலிருந்து வெளியாகும் ஆங்கிலப்பத்திரிகை ஒன்று கருத்துத் தெரிவித்துள்ளது. (இ)

## ஜட்டி உரை

புதுடில்லி, மார்ச் 24

இந்திய ராஜ்யசபை–லோகசபைஆகியவற்றின் கூட்டுக் கூட்டம் ஒன்றில் பதில் ஜனுதிபதி திரு. ஜட்டி இம் மாதம் 28ம் திகதி உரையாற்றுவார். (உ)

## காங்கிரஸ் எம். எல். ஏக்கள் ஜனதாவுக்கு மாற்றம்

புதுடில்லி. மார்ச் 24

மேற்கு வங்காள சட்டசபையில் உள்ள 7 காங்கிரஸ் உறுப்பினர்கள் ஜனதா கட்சியில் சேர்ந்துள்ளனர்.

இதை அடுத்து இவர்களுக்கு சபாநாயகர் எதிர்க்கட்சி ஆசனங்களை ஒதுக்கியுள்ளார்.

பீகாரில் 2 காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்கள் ஜனதா கட்சியில் சேர்ந்துள்ளனர்.

மத்தியப்பிரதேசத்தில் அண்மையில் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட காங்கிரஸ் தலைவர் தமது குழுவினருடன் ஜனதா கட்சியில் சேர்ந்துள்ளார். (இ)

# தமிழ்நாட்டில்

## 303 கைதிகள் விடுதலை

சென்னை, மார்ச் 24

தமிழ்நாட்டில் கடத்தல், மோசடி குற்றச்சாட்டுகளின் பேரில் காவலில் வைக்கப்பட்டிருந்த 260 கைதிகளும் 'மிசா' சட்டத்தின்கீழ் வைக்கப்பட்டிருந்த தடைசெய்யப்பட்டிருந்த இயக்கத்தைச் சேர்ந்த வேறு 43 கைதிகளும் இன்று விடுதலை செய்யப்பட்டனர்.

அவசரகாலச்சட்டம் நீக்கப்பட்டதையடுத்து இவர்கள்விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இதுபோன்ற பல மாநிலங்களிலும் தடை செய்யப்பட்ட இயக்கங்களைச் சேர்ந்தவர்களும் வேறு மிசாகைதிகளும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். (இ)

## கோபாலனின் சிதைக்கு மகள் தீயிட்டார்

திருவனந்தபுரம், மார்ச் 24

காலஞ்சென்ற இந்தியமார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்திரு.ஏ. கே. கோபாலனின் பூதவுடல் நேற்று அவரது சொந்தக்கிராமத்தில் தகனம் செய்யப்பட்டது.

கேரளக்-கன்னூரில் உள்ள அவரது சொந்தக்கிராமத்தில் இறுதிச் சடங்குகள் நடைபெற்றன. அவரது மகள் லைலா தந்தையின் சிதைக்கு தீ வைத்தார்,

பல்லாயிரக்கணக்கான மக்களும் தலைவர்களும் அன்னுரின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர். (இ)

## பிரதம நீதியரசர் நியமன விவகாரம்: விசாரணை வரும்?

புதுடில்லி, மார்ச் 24

இந்திரா ஆட்சியில் பிரதம நீதியரசர் நியமனத்தில் புறக்கணிக்கப்பட்ட, இழிவுபடுத்தப்பட்ட நீதிபதிகளின் விவகாரம் குறித்து அரசாங்கம் விசாரணைகளை நடத்தவேண்டுமென்று முன்னுள் நீதியரசர் திரு. சிந்தே கூறியுள்ளார்.

பிரதம நீதியரசர் தெரிவில் புறக்கணிக்கப்பட்டவர்களில் ஒருவரான திரு.சிந்தே,ஜனதா கட்சி சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

நீதிபதிகளின் விருப்பமின்றி அவர்களை இடமாற்றம் செய்யக்கூடாதுஎன்றும் அவர் கேட்டுள்ளார். (இ)

பிரிட்டிஷ் ஆளும் கட்சிமீது

## எதிர்க்கட்சிக்கு நம்பிக்கை இல்லையாம்! தீர்மானம் தோல்வி

லண்டன், மார்ச், 24

பிரிட்டிஷ் ஆளும் கட்சிக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் 24 வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டது.

எதிர்க்கட்சியான கன்சர்வேடிவ் கட்சியினுல் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு ஆதரவாக 298 வாக்குகளும் எதிராக 322 வாக்குகளும் கிடைத்தன.

நேற்று பிரிட்டிஷ் ஆட்சிமன்றத்தில் நடைபெற்ற இந்த விவாதத்தில் எதிர்க்கட்சிகளில் ஒன்ருனலிபரல் கட்சியும் ஆளும் கட்சிக்கு ஆதரவாக வாக்களித்தது.

இந்த வேளையில் ஆளும் தொழிற்கட்சிக்கும் லிபரல் கட்சிக்கும் இடையே ஒப்பந்தம் ஒன்று ஏற்பட்டுள்ளது என்று தொழிற் கட்சித் தலைவரும் பிரதமருமான திரு. ஜேம்ஸ் கலகன் தெரிவிதநுள்ளார்.

இந்த ஒப்பந்தத்துக்கு அமையவே லிபரல் கட்சி ஆளும் கட்சிக்கு ஆதரவாக வாக்களித்தது. (இ)

## மீண்டும் பாரிஸ் பேச்சுவார்த்தை

வாஷிங்டன், மார்ச் 24

வியட்னும் அமெரிக்க உறவுகளை சகஜமான நிலைக்குக் கொண்டுவருவதற்கான பேச்சுவார்த்தைகள் மீண்டும் பாரிஸில் நடைபெறவுள்ளனஎன்று அமெரிக்க ஜனுதிபதி திரு. ஜிம்மிகார்ட்டர் தெரிவித்துள்ளார். (இ)

ஜனதா-ஜனநாயக காங்கிரஸ் புதிய உறுப்பினர்கள்

# காந்திஜியின் சமாதிமுன் உறுதிப் பிரமாணம்

## ஜெயப்பிரகாஷ் தலைமையில் வைபவம்

புதுடில்லி,மார்ச் 24

இந்திய லோகசபைக்குப் புதிதாகத் தெரிவுசெய்யப்பட்ட ஜனதா கட்சி, ஜனநாயககாங்கிரஸ் கட்சி ஆகியவற்றின் உறுப்பினர்கள் இன்றுகாலை புதுடில்லியிலுள்ள தேசபிதா மகாத்மாகாந்தியின சமாதிக்கு முன்னே, இந்த நாட்டின் சேவைக்காக தம்மைத்தாம் அர்ப்பணித்துக் கொள்வதாக உறுதிமொழி எடுத்துக்கொண்டனர்.

சர்வோதயத் தலைவர் திரு. ஜெயப்பிககாஷ் நாராயண் இந்த வைபவத்தை முன்நின்று நடத்தினுர்.

திரு. ஜெயப்பிரகாஷ் அங்கு கூறிய இந்த உறுதிமொழியை சகலஉறுப்பினர்களும் சொல்லி உறுதிப்பிரமாணம் செய்து கொண்டனர்.

பொதுவாழ்விலும் தனிப்பட்ட வாழ்விலும் நேர்மையையும் தூய்மையையும் கடைப்பிடிப்போம் என்றும், தேசிய ஐக்கியத்தையும் சௌஜன்யத்தையும் பாதுகாத்துச் சிக்கன வாழ்வு வாழ்வோமென்னும் இந்த உறுப்பினர்கள் தமது உறுதிமொழியில் தெரிவித்தனர்.

இவ் வைபவத்தின்போது, ஆச்சாரிய கிருபளானியும் அங்கு சமுகமளித்திருந்தார்.

பல்லாயிரக்கணக்கான மக்களும் இவ்வைபவத்தின்போது அங்கு குழுமியிருந்தனர்.

இந்தியாவின் விடுதலைக்காகப் போராடி மறைந்த தலைவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் இவ்வைபவத்தில் ஒருநிமிடநேர மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது. (இ)

## லோகசபையில் 18 பெண்கள்

புதுடில்லி, மார்ச் 24

புதிய லோகசபையில் 18 பெண்கள் உறுப்பினர்களாக உள்ளனர்

ஜனதா கட்சியில் 8 பெண்களும் காங்கிரசில் 5 பெண்களும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில் 2 பெண்களும் வேறு மூன்று கட்சிகளில் தலா ஒரு பெண் உறுப்பினரும் உள்ளனர்.

கலைக்கப்பட்ட லோகசபையில் திருமதி காந்தி உட்பட 21 பெண்மணிகள் அங்கம் வகித்தனர். (இ)

## கலந்துரையாடுவர்

இணுவில்,வியா

முந்திரிகைச் செய்கையாளர்களை எதிர் நோக்கும் பிரச்னைகள், முந்திரிகைப் பழத்தைச் சந்தைப்படுத்துதல் முதலான விடங்கள் பற்றி ஆராயும் பொருட்டு எதிர் வரும் ஞாயிற்றுக்கிழமை காலை மானிப்பாய் இந்துக் கல்லூரி மண்டபத்தில் கலந்துரையாடல்நடைபெறவிருக்கின்றது.

முந்திரிகைப்பழச் செய்கையாளர்கள், இளம் விவசாயிகள் இக்கலந்துரையாடலில் பங்கு பற்றுவர். (உ)

## மணிவாக்கு

சோதனைக்காலங்களிலெல்லாம் கடவுள் என்னைக் காப்பாற்றியிருக்கிருர். 'கடவுள் என்னைக் காப்பாற்றினுர்' என்ற வாக்கியம், என்னைப்பொறுத்தவரையிலும் இன்று ஆழ்ந்த பொருள் கொண்டதாக இருக்கிறது. ஆனல் அந்த வாக்கியத்தின் முழுப்பொருளையும் நான் இன்னும் கண்டறியவில்லை. எனக்குத் தோன்றுகிறது பரிபூரணமாக அறிய இதைவிடப் பழுத்த அனுபவம் தேவை.

—மகாத்மாகாந்தி

ஈழநாடு
THE EELANADU

# பிரார்த்தனை

மூதறிஞர் எஸ். ஜே. வி. செல்வநாயகம் திடீரெனச் சுகவீனமடைந்த செய்தி ஈழம்வாழ் தமிழ் பேசும் மக்களுக்கு மட்டுமல்ல அவரது கொள்கையை ஏற்றுக்கொள்ளாதவர்களுக்கும்கூட அதிர்ச்சியைக் கொடுத்திருக்கு மென்பதில் ஐயமில்லை.

நேர்மைக்கும் ஆற்றலுக்கும் பெயர்பெற்ற அரசியல் தலைவர் திரு. செல்வநாயகம்.

பெரும்பான்மைச் சமூகத்தவர்கள் அவரது அரசியல் கொள்கையில் கருத்து வேறுபாடு கொண்டிருந்தாலும் திரு. செல்வநாயகத்தின்மீது தனிமதிப்பு வைத்துள்ளனர்.

ஈழம்வாழ் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் சோதனைமிக்ககாலம் இது.

தமிழ்மக்களின் தன்னிகரில்லாத் தலைவனுகவிளங்கிய திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்தையும், தமிழ்மக்களின் நலனையே தன் மூச்சாகக்கொண்டு இறுதிவரை உழைத்த திரு. எம். திருச்செல்வத்தையும் நான்கு மாதங்களுக்குள் ஒருவர்பின் ஒருவராகப் பறிகொடுத்துவிட்டுத் தவிக்கிறது தமிழ்ச் சமுதாயம்.

இந்த நிலையில் ஈழம் வாழ் தமிழ்மக்களின் மாபெரும் தலைவராக விளங்கும் மூதறிஞர் செல்வநாயகம் திடீரென நோய்வாய்ப்பட்ட செய்தி அதிர்ச்சியளிக்காமலிருக்கமுடியுமா?

பல்வேறுசோதனைகளாலும் விரக்தியடைந்துள்ள இளைஞர்கள், எங்கே. ''இளங்கன்று பயமறியாது'' என்ற முறையில் திசைமாறிப் போய்விடுவார்களோ என்ற அச்சம் தமிழ்மக்கள் மத்தியில் தோன்ருமலில்லை.

ஆனுலும் ''பெரியவர்'' இருக்கிருர்; இளைஞர்களுக்கு நல்ல புத்திசொல்லி சரியான வழியில் கொண்டு செல்வார் என்ற நம்பிக்கை சமுதாயத்திற்கு ஆறுதலளித்துவருகிறது.

இந்நிலையில் மூதறிஞருக்குத்திடீர்ச்சுகவீனம் என்ற செய்தி அதிர்ச்சி தராதா?

இளைஞர்களைப் பற்றிய சிந்தனைதான் 'பெரியவருக்கு' இப்படித் திடீர்ச் சுகவீனம் ஏற்படக் காரணமென்று குடும்பத்திலுள்ள பெரியோர்கள் கருதுவதற்கு இடமுண்டு.

மூதறிஞரின் உடல்நிலை தேறுவதற்கு இளைஞர்கள் தமது துடிப்பைச் சிறிது கட்டுப்படுத்தி வைப்பது நல்லது,

இதேசமயம் திரு. செல்வநாயகம் விரைவில் பூரண குணமடையவேண்டுமென்று தமிழ்மக்கள் பிரார்த்தனைசெய்யவேண்டும்.

பின்தலைக்குள் உறைந்திருந்த இரண்டு இரத்தக் கட்டிகளை சத்திரசிகிச்சை நிபுணர்கள் அகற்றிவிட்டனர்.

ஆபத்தான கட்டத்தை மூதறிஞர் தாண்டிவிட்டார் என்று வைத்தியர்கள் கூறுகின்றனர்.

வைத்தியர்கள் தமது பணியைச் சிறப்பாகச் செய்துள்ளனர்.

இனி மக்களின் கடமை மூதறிஞரின் உடல்நலனுக்காகப் பிரார்த்திப்பதேயாகும்.

'திக் கற்றவர்களுக்குத் தெய்வமே துணை'யல்லவா?

# ஓய்வூதியம் பெற்ற ஆசிரியர் சங்கம் அமைக்க முயற்சி

யாழ்ப்பாணம்,வெள்ளி

'நாடுபூராவும் பரந்துள்ள எமது இளைப்பாறிய அங்கத்தவர்களை ஒன்றுசேர்த்து அவர்களுக்குரித்தான திணைக்களங்களின் பிரச்னைகளைத் தீர்ப்பதோடு காலத்துக்குக்காலம் கல்வி சம்பந்தமான கருத்தரங்கு முதலிய நற்கருமங்களிலும் ஈடுபட இவ்விதசங்கம் மிக மிக அவசியமானது' என்று ஆசிரியா திரு.நா.தம்பிரத்தினம், அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்க அங்கத்தவராயிருந்து ஓய்வூதியம் பெற்ற ஆசிரியர்களது சங்கம் ஒன்று நிறுவும் ஆரம்ப ஆலோசனைக் கூட்டத்தில் தலைமை தாங்கிப்பேசுகையில் கூறினுர்.

யாழ்ப்பாணத்திலுள்ள சங்கப்பணிமனையில் இக்கூட்டம் நடைபெற்றது.

கூட்ட அமைப்பாளர் திரு. க இ. குமாரசாமி பேசுகையில், 'வாழ்க்கைச்செலவு வேகமாக இன்று உயர்ந்துசெல்வதால் அதற்குத் தக்கவிதத்தில் எமது ஓய்வூதியங்களும் உயர்த்தப்பட இவ்வித சங்கங்களை நிறுவி ஆவன செய்யலாம். காலத்துக்குக்காலம் இலங்கையின் பல பாகங்களிலும் தமிழ் மாணவர் கல்வி, தமிழ்ப்பாடசாலைகளின் முன்னேற்றம் சம்பந்தமான காரியங்களிலும் எமது ஆய்வரங்குகளை நடத்தி எமது கருத்துக்களை வெளிப்படுத்தலாம்' என்ருர்.

திருவாளர்கள் இ.கந்தையா எம். டானியல்ரூச், பண்டிதர் ச. பொன்னுத்துரை,பண்டிதர் க.யோ. ஆசிநாதன்: க. நமசிவாயம், இ. போ. குமாரசாமி ஆகியோரும் பேசினர்.

சங்க அமைப்புவிதிகள் தயாரிக்கும் பொருட்டு திருவாளர்கள் இ.கந்தையா, பண்டிதர் ச. பொன்னுத்துரை, க இ. குமாரசாமி ஆகியோர் கொண்ட உபசபை ஒன்றும் தெரிவாகியது.

தற்காலிக நிர்வாகசபைத் தேர்தலில் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர் திரு நா. தம்பிரத்தினம், உபதலைவர்கள்: திரு. இ. கந்தையா, எம். டானியல்ரூச், செயலாளர் திரு. க.இ.குமாரசாமி, பொருளாளர்: திரு. இ.பொ. குமாரசாமி.எழுவர் கொண்ட செயற்குழுவும் தெரிவுசெய்யப்பட்டது.

அடுத்த கூட்டத்தை ஏப்ரல் மாதம் 23ம் திகதி யாழ்ப்பாணத்தில் கூட்டுவதெனவும், பொதுவான அறிவித்தல் ஒன்றின் மூலம் ஓய்வுபெற்ற ஆசிரியர்களைத் திரட்டவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. (உ)

புதுடில்லி, மார்ச் 24

# லோகசபையில் அன்றும் இன்றும்

கலைக்கப்பட்ட லோகசபையில் 39 அங்கத்தவர்களை மட்டுமே கொண்டிருந்த ஜனசங் சோஷலிஸ்ட் - ஸ்தாபன காங்கிரஸ் - பாரதிய லோக்கள் ஆகிய நான்கு கட்சிகளை உள்ளடக்கிய ஜனதாகட்சி புதிய லோகசபையில் 270 தொகுதிகளைக் கைப்பற்றியுள்ளது.

### காங்கிரஸ்
### 355—153

5-வது லோகசபையில் 355 அங்கத்தவர்களைக் கொண்டிருந்த காங்கிரஸ்கட்சியால் இம்முறை 153 தொகுதிகளை மட்டுமே பெறமுடிந்தது.

### ஜன. காங். 27

தேர்தல் அறிவிப்பின்பின் காங்கிரஸ்கட்சியிலிருந்துவெளியேறிய முன்னுள் உணவு விவசாய அமைச்சர் உருவாக்கிய ஜனநாயக காங்கிரஸ் கட்சி 27 ஸ்தானங்களைக் கைப்பற்றியுள்ளது. இக்கட்சியின வயது இரண்டே இரண்டு மாதங்கள்.

### அ. அ- தி. மு. க.
### 6—19

அண்ணு திராவிட முன்னேற்றக் கழகமாக இருந்தபோது 6 உறுப்பினர்களைக் கொண்ட கட்சிஇப்போது அனைத்திந்திய அண்ணுதிராவிட முன்னேற்றக் கழகமாகி 19 ஸ்தானங்களைக் கைப்பற்றிஅதிகபலம்பெற்றுள்ளது.

### இ. கம்யூனிஸ்ட்
### 24 7

24 தொகுதிகளைக் கொண்டிருந்த இந்திய கம்யூனிஸ்கட்சிக்கு 7 இடங்கள் மட்டுமே கிடைத்துள்ளன.

### தி. மு. க.
### 12—1

12 உறுப்பினர்களைக் கொண்டுதமிழ்நாட்டில் பெரும் பலத்தைப் பெற்றிருந்த தி. மு. கவின் நிலை படுமோசமாகப் பாதிக்கப்பட்டு அது ஒரே ஒரு இடத்தைமட்டுமே பெற்றுள்ளது.

### மார்க். கம்.
### 26—22

26 உறுப்பினர்களைக் கொண்டிருந்த மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சிக்கு 22 தொகுதிகள் கிடைத்துள்ளன.

### அகாலிதளம்
### 1-8

ஒரேஒரு தொகுதியை மட்டுமே தம்வசம் வைத்திருந்த அகாலிதளம் கட்சி 8 இடங்களைக் கைப்பற்றியுள்ளது. (இ)

# நேதாஜி ச.ச. நிலையத் திறப்பு விழா

வேலணை,வியா

வேலணை மூன்ரும் வட்டாரத்தில் புதிதாக நிறுவப்பட்டுள்ள நேதாஜி சனசமூக நிலயத்தை எதிர்வரும் சனிக்கிழமை மாலை யாழ்.மாவட்ட அரசாங்கஅதிபர் திரு டபிள்யூ ஏ .எல். விஜயபலா திறந்து வைப்பார்.

இத்திறப்பு விழாவில் வேலணை உதவி அரசாங்க அதிபர் திரு.எம்.சுப்பிரமணியம், யாழ்.மாவட்ட உள்ளூராட்சிஉதவி ஆணையாளர் திரு அன்ரன்அல்பிரட் ஊர்காவற்றுறை எம்.பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் வேலணை கிராமசபைத்தலைவர் திரு.கே. சதாசிவம் உட்பட மற்றும் பலர் உரையாற்றுவர். (உ)

...

# வேலணை கி. ச. அனுதாபம்

வேலணை, வியா


''அரசியல் துறையில் பெரும் தலைவராக விளங்கிவரும்,தமிழ் மக்கள் உள்ளத்தில் எந்நாளும் நிலைத்துநிற்பவருமான.ஜி, ஜி. பொன்னம்பலத்தின் மறைவு இலங்கை வாழ்தமிழ்மக்களுக்கு மட்டுமல்ல அகிலஉலகுக்குமே ஒரு பேரிழப்பாகும் என்று வேலணைக்கிராம சபையின் மாதாந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட அனுதாபத் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிராமசபைத்தலைவர் திரு. க. சதாசிவம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் இரு நிமிடம் மௌனஞ்சலியும் செலுத்தப்பட்டது. (உ)

# இன்று திறப்புவிழா

நீர்வேலி, வெள்ளி.

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரிக்கெனப் புதிதாக அமைக்கப்பெற்ற இரு மாடிக் கட்டிடம் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் வடபிரதேச பிரதமகல்வியதிகாரி திரு.என். ஆர். பாலசிங்கத்திஞல்திறந்து வைக்கப்படவுள்ளது. கல்லூரி அதிபர் ப. சுவாமிநாதசர்மா தலைமையில் இவ்விழா இடம் பெறும். (அ)



# சாதனைகள் புரியும் சாவகச்சேரி இந்துக்கல்லூரி

பெற்ருர், ஆசிரியர். பழையமாணவர்கள், வித்தியா பகுதிஆகிய நாற்றிறத்தினரும் ஒத்துழைத்தால் எந்தக்கல்லூரியும்மேகோந்நதநிலையை அடைய முடியும். சாவகச்சேரியில் இதைக்காணலாம்.

மூன்றுஇலட்சம் ரூபா செலவில் ஒரு அழகான ரசாயன ஆய்வுகூட மாடிக் கட்டடத்தைப் பழைய மாணவர் சங்கம் சாவகச்சேரி இந்துக்கல்லூரியில்கட்டி கல்வித்தரம் உயர வழிவகுத்தது. அதற்குப் 'போட்டியாக' பெற்ருர் ஆசிரியர்சங்கம் ஒன்றரை லட்சம் ரூபாசெலவில் கல்லூரி முகப்பில் ஒரு சிறந்த மாடிக்கட்டிடத்தை நூலகமாக அமைத்து ஜேர்மன் குடியரசுத் தூதரகச் செயலாளர் செல்வி உறுகலா முல்லரைக்கொண்டு நாளை சனிக்கிழமை திறப்புவிழா நடாத்துகின்றது.

இன்றைய அரசின் உதவியுடன் பிறிதொரு மாடிக்கட்டிடம் ஒருலட்சம் ரூபா செலவில் கடந்தமாதம் பூர்த்தியாகியுள்ளது குறிப்பிடத்தக்கது.

இத்தனைக்கும் சூத்திரதாரியாக விளங்குபவர் அதிபர்திரு. பூ. வெற்றிவேலு ஆவர். ஒத்தியங்கும் 72 ஆசிரியர்களையும் 2.225 மாணவரையும் கொண்ட இந்த உயர்தர இந்துக்கல்லூரி தனக்கென ஒரு பாரம்பரியத்தை ஆக்கியுள்ளது. நல்ல பரீட்சைப்பெறுபேற்றைக்கண்டது.

தனிப்பட்டமுறையிலும் கல்லூரிக்கு கட்டிடஉதவி புரிந்துள்ளனர் பலர்.

திரு. மு. தா.சுப்பிரமணியம் ரூபா 25,000 பெறுமதியான ஒருநவீன வசதிகொண்ட திறந்தவெளியரங்கை அமைத்துக்கொடுத்துள்ளார்.

கடந்தவருடம் பெ. ஆ. சங்கம் 50,000 ரூபா செலவில் ஒரு தொழில் நிலயத்தை அமைத்துதவியது. கல்லூரியைச்சுற்றி நவீனமோஸ்தரில் மதிற்சுவர் அமைத்துக் கொடுத்து இரட்டைக் 'கேற்'றும்போட்டுஉதவியுள்ளார் திரு. எஸ். நவரத்தினம். நாளை திறக்கப்படும் மாடிக்கட்டிடம் இங்குகாணப்படுகிறது.

-ஆர். ரி. சுப்பிரமணியம்

# வங்கியாளர் பயிற்சித் தேர்வு படிவம் தமிழில் இல்லையாம்

கொழும்பு, வியாழன்

''வங்கியாளர் பயிற்சித் தேர்வின் பகுதி ஒன்றிற்கும் பகுதி இரண்டிற்கும் விண்ணப்பப் படிவங்களை உங்கள் நிறுவனத்திடம் இருந்து தமிழில் பெறமுயன்றபோது அவை தமிழில் இல்லை என்று கூறப்பட்டதாக எம் சங்கத்திற்கு முறைப்பாடுகிடைத்துள்ளது. ஏன் இந்தப்பாகுபாடு காட்டப்படுகிறது என்பது புரியவில்லை.''

இவ்வாறு மத்தியவங்கி தமிழ் ஊழியர் சங்கம் வங்கியாளர்பயிற்சி நிலையத்தலைவருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதம் ஒன்றில் தெரிவித்துள்ளது.

இக்கடிதத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது; ''முன்னர் பல தடவை தமிழுக்குரிய இடம் வழங்கும்படி கேட்டபடியால்தான் சிலவற்றைத் தமிழில் செய்துள்ளீர்கள். தமிழர் இந்நாட்டின் பிரிக்க முடியாத உறுப்பாக விளங்குகின்ற வரையில் அவர்களுக்குரிய உரிமைகளை நீங்கள் வழங்க மறுப்பது வேதனைமிக்க செயலாயிருக்கிறது. தொடர்ந்தும் உங்கள் மீது குற்றம் சுமத்த இடம் தராதமுறையில் தமிழுக்குரிய தகைமை கொடுத்து தமிழர் தன்மான நிலையில் வாழ்வதற்கு வழி வகுக்கவும்.'' [உ]

# பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம்,வெள்ளி

நான்காம்,ஐந்தாம் தர அதிபர்கள் சங்கப்பொதுக்கூட்டம் யாழ்ப்பாணம் நாவலர்வித்தியாலய மண்டபத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெறவிருக்கிறது திரு.சி. தங்கராஜா தலைமையில் நடைபெறவிருக்கும் இக்கூட்டத்தில் திருவாளர்கள் ச.கி.சுந்தரலிங்கம்,சி. சிவபாலசிங்கம் ஆகியோர் உரையாற்றுவர். (உ)

# கல்லோயாவில் முஸ்லிம்கள் குடியேற மறுத்ததனல், சிங்களக் குடியேற்றம் நடந்தது!

## டி. எஸ்., டட்லி காலத்தில் தமிழர்களுக்கு மாறாக எதுவும் நடக்கவில்லை

### இராஜசிங்கத்திற்கு 'சுந்தரர்' பதில்

அன்பார்ந்த கே. ரி. இராஜசிங்கத்திற்கு,

ஈழத் தமிழருக்கு 29-ம் ஷரத்தினுல் ஏற்பட்ட அவலநிலையின் அம்சங்கள்பற்றி சுட்டிக்காட்டி சுமார் 15 லட்சம் இந்திய வம்சாவழித் தமிழர் பிரஜா உரிமை இழக்கும் சட்டம் உருவாக்கப்பட்டதுஎன்று கூறியிருக்கிறீர்கள்.

1948.ம் ஆண்டில் நான் மந்திரியாய் இருக்கும்போது இலங்கையில் வசிக்கும் இந்திய பாகிஸ்தான் மக்களுக்கு பிரஜா உரிமை கொடுக்கும் சட்டம் பாராளுமன்றத்தில் கொண்டு வந்தபொழுது அச்சட்டத்தை மந்திரியாக இருந்தபோதிலும் ஆமோதிக்காதபடியால்என்னை மந்திரிசபையிலிருந்து டி. எஸ். விலக்கினுர்.

### காரியப்பரே பொறுப்பு

தமிழ்பிரதேசமான கல்லோயா சிங்கள மக்களின் குடியேற்றபிரதேசமாகியது ஏன் என்று கேட்டிருக்கிர்றீர்கள்?

பதில்: இந்தகுற்றத்தை முதலியார்காரியப்பரின் தலையில் சுமத்தவேண்டும். அவர் சேனநாயக்காக்காவுக்கு கிழ்மாகாணத்தில் முஸ்லிம் மக்கள் சொந்தமாகவும் குத்தகையாவும் காணிகளை செய்கிறுர்கள் கல்லோயாவுக்கு கிழே காணி எடுக்கமாட்டார்கள் என்று சொன்னபடியால் தான் அந்தக்காணிகளைச் சிங்களவருக்கு டி. எஸ். சேனநாயக்கா வழங்கினுர். இந்தஉண்மையை பலமுறையும் நான் பகிரங்கப் படுத்தியிருக்கிறேன். உங்களுக்குத் தெரியாத விஷயத்தை கூறியதையிட்டு மன்னிக்கிறேன்.

சிங்களம்மட்டும் இந்நாட்டின் உத்தியோகமொழி என்று சட்டம் உருவாக்கப்பட்டது என்றீர்கள்.

பதில்: எனது முயற்சியால் 1944-ம் ஆண்டு சிங்களம் தமிழ் ஆங்கிலம் சமத்துவ அரசாங்க பாஷைகளாக இலங்கை முழுவதும் வழங்க வேண்டும் என்று முடிவாகியது. கல்வி மந்திரி எம். டி. பண்டா, பிரதமர் கொத்தலாவலை பண்டாரநாயக்கா ஆகியோர் அந்த முடிவைமாற்றும் முயற்சியை எடுத்தபடியால் தான் நான் தனி அரசுவேண்டும் என்ற பிரேரணையை பாராளுமன்றசபையில் சமர்ப்பித்தேன் ஏன் இந்த உண்மையை ஒளிக்கப்பார்க்கிறீர்கள்.

உங்கள் ஆசீர்வாதத்தோடு உருவாக்கப்பட்ட கனகரத்தினம் விசாரணைக்குழுவின் அறிக்கையில் இந்தநாட்டில் வாழும் சிறுபான்மைத் தமிழ்மக்கள் என்று அழைக்கப்படுபவர்களுக்கு ஆலயப்பிரவேசம் போன்றவைகள் சட்டபாதுகாப்போடு வழங்கப்படவேண்டும் என்ற சிபார்சு நிராகரிக்கப்பட்டது ஏன் என்றீர்கள்?

பதில்: கனகரத்தினம் கமிஷன் அறிக்கையை அத்திவாரமாக பாவித்து ஒருசட்டம் செனட்சபைக்கு கொண்டு வரப்பட்டது. அந்தசட்டத்தின் இரண்டாம் தர்க்கத்தில் செனட்சபைக்கு எடுக்க ஐந்து நாட்களுக்குமுன் என்னிடம் நல்லூர்கந்தசுவாமி கோவில், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் போன்ற பெரியசிறிய சைவக்கோவில்களின் குருக்கள்மார்களும் சிவபாதசுந்தரம் போன்றவர்களும் வந்து ஐயா எங்கள் ஆகமங்களுக்கும் சைவ கோவில்களுக்கும் இந்தச் சட்டம் விரோதமாய் இருக்கிறது. ஆகவே இந்தச்சட்டத்தை ஒப்பேற்றினுல் பரம்பரை காலமாய் இருந்துவணங்கும் கோவில்களை மூடவேண்டும் எங்களை நீங்கள்தான் காப்பாற்றவேண்டும் என்று கேட்டார்கள். நான் சொன்னேன். உடனே யாழ்ப்பாண நகர மண்டபத்தில் ஒரு கூட்டம் கூடுங்கள் நான் தலைமை வகிக்கிறேன் என்றேன். கூட்டம் நடைபெற்றது. சைவசமயத்தில் யாரும் கைபோடப்படாது என்று கூக்குரல் எழுப்பினேன். கடைசியில் அந்தச்சட்டம் அப்போது நிறைவேறவில்லை. சிலவருடங்களின்பின் ஒளித்து மறைத்து சிறுபான்மைமக்களை கிறிஸ்தவகோயிலிலும் சைவக்கோயிலிலும் பொலிஸ் பாதுகாப்போடு உட்பிரவேசிக்க எத்தனித்தார்கள். குருநாகல், மகோ, மதவாச்சி முதலிய இடங்களில் இருந்து பொலிஸ் படைகள் வந்தார்கள் துப்பாக்கிகளுடன் சிறுபான்மை தமிழ்மக்களையும் கம்யூனிஸ்டுகளையும் பலாத்காரமாக உட்பிரவேசிக்க எத்தனித்தார்கள். மிளகாய்த்தூளாலும் கற்களாலும் கொட்டன்களாலும் மாவை முருகன்கருணையினுலும் பொலிஸ்படைகளும் எம். பி. சமரக்கொடியும் பெரும் இடதுகை சேனைகளும் துரத்தப்பட்டார்கள். 29-வது ஷரத்தினுல் தான் சைவசமய அடியார்கள் தங்களின் பரம்பரை உரிமைகளைப்பெற்றுர்கள். அன்பர் ராஜசிங்கம், 29-வது ஷரத்தின் கருத்து விளங்காதபடியால்தான் இப்படி எழுதியிருக்கிறீர்கள்.

சேனநாயக்காவை மந்திரிப் பதவியேற்றுவதற்காக இரவு பகலாக உழைத்தீர்கள். இதை மறுக்கவோ மறைக்கவோ முடியாது. நீங்கள் அவர்மீது வைத்த நம்பிக்கையினுல்தான் தமிழினம் இந்த அவலநிலைக்குள்ளாகியது என்பதை ஏற்றுக்கொள்வீர்களா என்று கேட்டிருக்கிறீர்கள்.

### விவாதமேடை

பதில்: நான் சிங்களத் தலைவர்களை நம்பிக்கெட்டுப் போனேன்என்று பலமுறையும் பகிரங்கப்படுத்தியிருக்கிறேன். சேனநாயக்காவின் காலத்திலோ அவருக்குப்பின் டட்லியின் காலத்திலோ ஈழத் தமிழ் மக்களுக்கு விரோதமாக ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆனுல்மற்றும் சிங்களப் பிரதமர்களும் தலைவர்களுமே தமிழருக்கு துரோகமாக நடந்திருக்கிறுர்கள். ஆகையால்தான்சிங்களத்தலைவர்களை ஒருபொழுதும் நம்பமாட்டேன் என்ற தீர்மானத்தில் ஈடுபட்டிருக்கிறேன். அந்தத்தீர்மானத்தை ஈழத்தமிழ்தலைவர்களும் பின்பற்றினுல்தான் ஈழத் தமிழ் இனத்திற்குவிமோசனம் கிடைக்கும். என்பகிரங்க அரசியல் சீவியத்தில் இதுதான் ஒரே ஒரு பெரும்பிழை.

ஜீ. ஜீ. பொன்னம்பலம், செல்வநாயகம் ஆகியோர் ஆணித்தரமாக எதிர்த்த சோல்பரி ஆணைக்குழுவினரின் வெள்ளை அறிக்கையை ஆதரித்தீர்கள் ஏன் என்று கேட்கிறீர்கள்.

பதில்- இதுபொய். வெள்ளை அறிக்கை சட்டசபையில் விவாதிக்கப்பட்டது. விவாதம் முடிந்ததும் ஒருதமிழராவது தங்கள் எதிர்ப்பைக்காட்டவில்லைஅந்த வெள்ளையறிக்கையில் இருந்த விடயங்களை ஒருசிங்களப்பிரதிநிதிதான் எதிர்த்துவாக்களித்தார். பின் 1947-48-ல் சுதந்திரச் சட்டத்தை பாராளுமன்றத்தில் கொண்டுவந்து விவாதத்திற்கு எடுத்தபோது திரு. பொன்னம்பலத்தைவிட திரு. செல்வநாயகம் மற்றும் உறுப்பினர்களும் எதிர்த்துப் பேசினுலும் ஒருவராவது தங்கள் எதிர்ப்பை கைஉயர்த்திக் காட்டவில்லை. நீங்கள் ஹான்சாட்டைப் படிக்கவில்லைப்போலும். ஒரு புத்திமதியைஉமக்கு சமர்ப்பிக்கிறேன். ஏற்றுக்கொள்ளவும். இனிமேல் அரசியல் விடயங்களைப்பற்றிஎழுதுமுன்1947-ம் ஆண்டுதொடக்கம் இன்று வரையிலும் எழுதப்பட்ட ஹான்சாட்டைப் படித்தபின் பகிரங்கக்கடிதங்கள் எழுதுங்கள்.

1947-ம் ஆண்டு தேர்தலில் தமிழ் மக்களின் தீர்ப்புக்கு எதிராக இயங்கினீர்கள் ஏன்?

பதில்: ஹான்சாட்டைப் படித்துப் பாருங்கள் ஈழத் தமிழர் சோல்பரிசுதந்திர சட்டத்திற்கு ஈழத்தமிழர் எவரும் எதிராக கை உயர்த்தாதபடியால் தான் ஜி. ஜி. பொன்னம்பலம் மந்திரிப் பதவியில் சேர்க்கப்பட்டார் அப்போது இலங்கையில் 12 மந்திரிகள் இருந்தனர். அவர்களில் மூன்று தமிழ் மந்திரிகள். சுந்தரலிங்கம், பொன்னம்பலம், சிற்றம்பலம் ஆகியோர் இருந்தனர் இதுதான் உண்மை.

நீங்கள் நான் வெளியிட்ட கிறீவன்ஸ் நூலில் உள்ளவற்றை பிரசுரித்து இதை மறுக்கவோ மறைக்கவோ முயலாதீர் என்று கூறியிருக்கிறீர்கள் அதற்கானபதில் கீழே உள்ளது.

பதில்: அந்தநூலை திருப்பி திருப்பி படித்துப் பார்த்தால் மூன்றுவிடயங்கள் வெளிப்படும்.

நான் சேனநாயக்காவையும் மற்றும் சிங்களத் தலைவர்களையும் நம்பிநடந்த படியால்தான் சோல்பரிச் சுதந்திர சட்டம் ஒப்பேற்றப்பட்டது. அந்த நம்பிக்கையின் நிமித்தம்தான் ஈழத்தமிழருக்கு இந்த கேவலமான நிலபரம் வந்துவிட்டது அந்த நிலபரத்தை அகற்ற வேண்டும் அந்த நிலபரத்துக்கு என்னுடன் திரு. பொன்னம்பலம் திரு. செல்வநாயகம் ஆகியோர் பங்கு பெற்ற வேண்டும். ஏனெனில் அவர்களும் சோல்பரி சுதந்திர சட்டத்தை எதிர்த்து கை உயர்த்தவில்லை இப்போது நாங்கள் ஈழத்தமிழினம் இருக்கும் நிலபரத்தை அகற்ற வேண்டுமானுல் கட்சிகள் எல்லாவற்றையும் ஒதுக்கி கட்சிகளின் பேரில் அபேட்சகர்களை நியமிக்காமல் 40வயதுக்கு மேல் ஒருவரும் எதிர்வரும் பொதுத் தேர்தலில் அபேட்சகராக ஈடுபடாமல் விலகியிருக்கவேண்டும். பௌத்த சிங்கள இனத்துக்கும் மற்றும் சிறுபான்மை இனங்களுக்கும் தான் பொதுதேர்தல்போல் சிறுபான்மை இனத்துடன் இணைந்திருக்கும் இனங்களின் போராக நடத்தினுல் ஈழத் தமிழினம் அழிந்துபோய் விடும் ஆனபடியால் தான் தற்போதிருக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஈழத் தமிழ் மக்களின் சார்பில் ஒரு வேண்டுகோள் விடுக்கிறேன்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஒரே ஒரு நோக்கம் இருக்கவேண்டும். 30 தொகுதிகளில் இருந்து தமிழ் உறுப்பினர்களை ஒருசேனுதிபதியின் அணியின் கீழ்பாராளுமன்றத்துக்கு அனுப்பவேண்டும். அப்படி அனுப்பினுல் விமோசனமுறை தெளிவாகிவிடும். நான் பொதுமக்களை தயவன்போடு கேட்டுக்கொள்வது என்னவென்றுல் தனித் தமிழ் அரசாங்கத்தை உருவாக்க வேண்டுமென்ற கோரிக்கையை 23 வருடத்திற்கு முன்பகிரங்கப் படுத்தினேன். அந்த கோரிக்கையை ஒப்பேற்ற வேண்டுமானுல் பொதுமக்கள் தான் ஈடுபடவேண்டும் அவர்கள் தங்கள்வாக்குச்சீட்டுக்களை வழங்கும் போது என்நோக்கத்தை மனதில் வைத்துக் கொண்டு நான் நியமிக்கும் அபேட்சகர்களுக்கு வாக்குச் சீட்டுகளை அளிக்கவேண்டும்.

---

## மண்டைதீவு கொலைமுயற்சி வழக்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம் வெள்ளி

மண்டைதீவுக் கொலைமுயற்சி வழக்கு, யாழ். மேல் நீதிமன்றத்தில், நீதிபதி ஜனுப் எம்,எம். அப்துல்காதர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் மண்டைதீவில் லட்சுமிகாந்தன், நல்லையா தவகுலசிங்கம் அல்லது யாதவன் ஆகியோர் செபமாலை யேசுதாசன், செபஸ்தி ஞானப்பிரகாசம் ஆகியோரை சுட்டுக்கொலைசெய்ய முயற்சித்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணி வி. என். நவரத்தினம், சட்டத்தரணிகள் ரி. சோமசுந்தரம், வி. வரதராஜா. செல்வி கனகரத்தினம் ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானுர். அரசதரப்பில் சட்டத்தரணி எஸ். ஸ்ரீரஞ்சன் வழக்கைநடத்தினுர்.

இவ்வழக்கு ஜூன்மாதம் 13-ம் திகதி மீண்டும் விசாரணை செய்யப்படும். (க-அ)

### மகஜர் கையளிப்பு

மட்டுவில், வியாழன்

''சாவகச்சேரி நகரசபை நாலாம் வட்டாரத்தைச் சேர்ந்த பெருங்குளம்' கல்வயல் வீதியின் ஒருபகுதிக்கு மட்டும் மின்சார விநியோகம் செய்யப்படாமை எமக்கு பெரும் துயரைக் கொடுக்கிறது அதை விரைவில் பூர்த்தி செய்து தரவேண்டும்'' என்று கோரும் மகஜர் ஒன்றை சாவகச்சேரி நகர சபையின் விசேட ஆணையாளர் திரு' அன்ரன் அல்பிரெட்டிடம் அப்பகுதிக் குடியிருப்பாளர்கள் சார்பில் கையளிக்கப்பட்டது.

இந்தமகஜரை திரு' அ. ஆனந்தேவன்' திரு. எஸ். எம். அருளம்பலம் தலைமையில் சென்ற தூதுக்குழு நேரில் சென்று ஆணையாளரிடம் கையளித்தது.

மகஜரைப் பார்வையிட்ட விசேட ஆணையாளர் விரைவில் பூர்த்திசெய்து தருவதாக உறுதியளித்துள்ளார். (உ)

## இன்று அங்கையன் கவிதை நூல் வெளியீடு

கொழும்பு, வெள்ளி

காலஞ்சென்ற திரு. அங்கையன்கைலாசநாதனின்கவிதைத் தொகுப்பான 'வைகறை நிலவு' நூல்வெளியீடு இன்று மாலை 5மணிக்குபம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ் நிகழ்ச்சிகளின் அதிகாரி திரு. கே. எஸ்' நடராஜா தலைமையில் நடைபெறுகிறது. (ப)

...

## ஏற்பாடு

வேலணை, வியா

வேலணை வெள்ளைக்கடற்கரைப்பள்ளிவாசலில் 25 வருடங்களாக பரிபாலன சபைத் தலைவராக இருந்துவந்தவரான ஜனுப். எம். எம். சுல்தானின் மறைவை யொட்டி இரங்கல் கூட்டமொன்றை நடாத்துவதற்கு மேற்படி பரிபாலனசபையின் செயலாளர் ஜனுப். கே. எம். எம். மூக்கைதீன் ஏற்பாடுகள் செய்து வருகின்றுர். (உ)

## ரயில்—பஸ் விபத்து: 2 பேர்பலி! 17 பேர் காயம்!!

கொழும்பு, வியாழன்

பாதுகாப்பற்ற ரயில் கடவையில் இடம்பெற்ற ரயில் - பஸ் விபத்தில் இருவர் கொல்லப்பட்டனர். 17பேர்படுகாயமடைந்தனர். கந்தானை பொலிஸ்பகுதியில் இவ்விபத்து இடம்பெற்றது.

கொழும்பிலிருந்து சென்று கொண்டிருந்த ரயிலும் பிரயாணிகள் நிறைந்த பஸ்ஸும் வெலிகம்பிட்டியாவில் உள்ள கடவையில் மோதிக்கொண்டதையடுத்து பஸ் பலத்த சேதத்துக்குள்ளானது.

பஸ்ஸை ரயில் பிளந்துவிட்டது என்று தெரிவிக்கப்பட்டது, (இ)

## த. வி. கூ. கொழும்புக் கருத்தரங்கு

கொழும்பு, வியா

தமிழர் விடுதலைக்கூட்டணி கொழும்புக்கிளையின் வாராந்தக் கருத்தரங்கு கிளைத்தலைவர் திரு ஈழவேந்தன் தலைமையில் பம்பலப்பிட்டியில் நடைபெற்றது.

கொழும்பு பிஷப் வண. டி. எல். அபயநாயகா பிரதம பேச்சாளராகக் கலந்துகொண்டார். (உ)

## காரைநகரில் நாளை எழுச்சி விழா

யாழ்ப்பாணம், வெள்ளி

காரைநகர் களபூமியின் அடியார் கோவில் வீதியில் தமிழர் விடுதலைக்கூட்டணி எழுச்சி விழா நாளைமாலை நடைபெறவிருக்கிறது.

இவ்விழாவிற்கு கிளிநொச்சி எம். பி. திரு. வி. ஆனந்தசங்கரி, உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம், பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம், வண்ணை ஆனந்தன், மாவை சேனுதிராசா, கவிஞர் காசி ஆனந்தன், கூட்டணி செயல் அதிபர் திரு. ஏ. அமிர்தலிங்கம், ஆகியோர் உரை நிகழ்த்துவார்கள். [க]

# தனிமனித நலனுக்காக இயக்கம் பிளவுபடக்கூடாது

## சங்கத்தானையில் காசிஆனந்தன்

மட்டுவில், வியா.

"கட்டுக்கோப்புடன்இயங்கி வரும் ஒரு இயக்கம் ஒரு தனி மனிதனுடைய நலத்திற்காகப் பிளவு படுவதையோ, குழப்ப மடைவதையோ நான் என்றும் விரும்பமாட்டேன்"

சங்கத்தானையில் தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்புக் கூட்டத்தில் பேசிய கவிஞர் காசி ஆனந்தன் இவ்வாறு கூறினார்.

சங்கத்தானை இத்தியடிப் பிள்ளையார் ஆலய முன்றலில், திரு. வ. சின்னையா தலைமையில் இந்த வரவேற்புக் கூட்டம் நடைபெற்றது. கவிஞர் காசி ஆனந்தன் தொடர்ந்து இக் கூட்டத்தில் பேசியதாவது:

"சமீபத்தில் நான் பேசிய ஒரு பேச்சுக்கு தலை, வால், கால் எல்லாம் கட்டப்பட்டு, பின் அதற்கு இறக்கையும் கட்டிப் பறக்க வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

ஒரு இயக்கம் என்பது நல்ல கட்டுக்கோப்புடன் கட்டி வளர்க்கப்பட வேண்டியது. ஒரு இயக்கத்தில் தனி மனிதன் நலத்திற்கு இடமிருக்க முடியாது. அது பரந்த அடிப்படையாக இயங்க வேண்டும். தனிமனிதன் நலத்திற்காக பிளவுகள் காண்பதையோ வேறு காரணங்களையோ தான் ஒரு போதும் விரும்ப மாட்டேன்"

சாவகச்சேரி எம்.பி. திரு. வி. என். நவரத்தினம்,வண்ணை ஆனந்தன், மாவை சேனாதிராசா, திரு. மதுரநாயகம், திரு. சத்தியசீலன் முதலானோரும் பேசினர். [உ]

## பிரிய விடை

பண்டத்தரிப்பு, வியா

பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியில் கடமையாற்றிய ஆசிரியர்கள் வி. ஆனந்தராசா வி, குணரத்தினம், பி. நவரத்தினம் திருமதி ஏ. நடராசா ஆகியோர் இடமாற்றத்தில் செல்வதையொட்டி இவர்களுக்குப் பிரிவுபசாரம் அளிக்கப்பட்டது.

கல்லூரி நலன் புரிச்சங்கத்தின் சார்பில் அதன் தலைவரான ஆசிரியர் திரு. பி. காங்கேசு தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் கல்லூரி அதிபர் திரு. வி. நாகராசா, திரு. க. பத்மநாதன், திரு. கே. சின்னத்தம்பி ஆகியோர் உரையாற்றினர்கள். (அ)

## கல்விச் சகாயநிதி கொடித்தின வாரம்

யாழ்ப்பாணம், வெள்ளி

அகில இலங்கை திருவள்ளுவர் மகாசபைக் கல்விச் சகாய நிதிக்காக நாடகப்போட்டியொன்று நடாத்தப்படவிருக்கிறது.

இந்நாடகத்தில் பங்குபற்ற விரும்புகிறவர்கள் இம்மாதம் 31ம் தேதிக்குமுன் திரு. க. கிருஷ்ணராசா, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில் என்ற விலாசத்தில் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

கல்விச் சகாயநிதி கொடி தினவாரம், ஏப்ரல் 2ம் தேதி முதல் ஏப்ரல் 10ம் தேதிவரை அனுஷ்டிக்கப்படவிருக்கிறது.

வள்ளுவர்தின விழாவும் ஏழாலையில் இம்மாதம் 28ம் தேதி கொண்டாடப்படவிருக்கிறது.

திரு. பி. எசேக்கியல் தலைமையில் நடந்த கமிட்டிக் கூட்டத்தில் மேற்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன. (க-அ)

## புதிய பஸ் சேவை

மட்டுவில் வியா.

மட்டுவில் பகுதியில் புதிய இ. போ. ச. பஸ் சேவை ஒன்றை விரைவில் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை யாழ். இ. போ. ச. அதிகாரிகள் எடுத்துவருகிறார்கள்.

இப்புதிய பஸ் சேவை துணுவில் வைரவர் கோவிலடியிலிருந்து மட்டுவில் பன்றித்தலைச்சி அம்பாள் வீதிஊடாக கனகன்புளியடிச் சந்திக்குச் சென்று, அங்கிருந்து மட்டுவில் பருத்தித்துறை வீதிவழியாக மட்டுவில் மகாவித்தியாலயச் சந்தியை அடைந்து, அங்கிருந்து கல்வயல், பெருங்குளம் வீதி வழியாக சாவகச்சேரி பஸ் நிலையத்தைச் சென்றடையும். இப்புதிய சேவை மூலம் மாணவர்கள் உட்படப் பலரும் பயனடைவர். (உ)

தீவுப்பகுதியில் முன்னர்போல்

## ப. நோ. கூ. சங்கங்கள் தனித்தனி இயங்குகின்றன

வேலணை, வியா.

தீவுப்பகுதி ப. நோ. கூ. சங்கம்என்றிருந்த சங்கம் முன்னர் போல தனித்தனியாக இயங்க ஆரம்பித்துள்ளன.

சென்ற சில மாதங்களுக்கு முன் தனித்தனியாக இயங்கி வந்த ஊர்காவற்றுறை, வேலணை, புங்குடுதீவு ஆகிய இடங்களில் இருந்த ப. நோ. கூ. சங்கங்கள் யாவும் ஒன்றிணைக்கப்பட்ட பிறகு மக்கள் திருப்தியான விதத்தில் பொருட்களை வாங்க முடியாதிருப்பதாக அதிகாரிகளுக்கும், தொகுதி எம்.பி.க்கும் புகார் செய்யப்பட்டதனையடுத்தமுன் போல் சங்கங்களைப் பிரித்து இயங்கச்செய்யுமாறு அமைச்சர் உத்தரவிட்டிருந்தார்.

இதனைத்தொடர்ந்தே இம் மாதம் 21ம் திகதி முதல் இவை முன்போல் இயங்க ஆரம்பித்துள்ளன. [உ]

## பழைய பூங்கா கொள்ளை வழக்கு இன்று தீர்ப்பு!

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் பழைய பூங்காவீதி கொள்ளை வழக்கில் குற்றவாளியாகக்காணப்பட்ட 1ம் எதிரிக்கும், குற்றத்தை ஒப்புக்கொண்ட 2ம் எதிரிக்கும் இன்று தீர்ப்பு வழங்கப்படும்.

இவ்வழக்கு யாழ். மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜனாப் எம். எம். அப்துல் காதர் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் யாழ். பழைய பூங்கா வீதியில் 27,417 ரூபாவைக் கொள்ளையடித்ததாக சபாரத்தினம், அருள்ராசா, சகாயராசா ஆகியோர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது

3ம் எதிரி மீதான குற்றச்சாட்டை அரச சட்டத்தரணி எஸ். ஸ்ரீ ரஞ்சன் வாபஸ் பெற்றிருந்தார். 1ம் எதிரியின் கைவிரல் அடையாள அறிக்கை கிடைக்காததினால் நேற்று முன்தினம் தீர்ப்பு வழங்கப்படவில்லை. (க)

"விளையாட்டு வீரர்கள்

## திறமையை பரவலாக காண்பிக்க வேண்டும்"

மட்டுவில், வியா.

'பாடசாலைகளிலுள்ள விளையாட்டு விரர்கள், தத்தம் திறமைகளைத் தமது பாடசாலைகளில் மட்டும் காண்பித்தால் போதாது. வட்டார ரீதியாகவும், அகில இலங்கை ரீதியாகவும் காண்பிக்கவேண்டும். அதன் மூலம் பாடசாலைகளின் புகழும் உயரமுடியும்'

இவ்வாறு தென்மராட்சிவட்டாரப் பாடசாலைகளின் விளையாட்டுப்போட்டி விழாவில் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு உரைநிகழ்த்திய உடற்பயிற்சிப் பிரதம கல்வி அதிகாரி திரு, வி. தங்கராஜா கூறினார்.

மட்டுவில் மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. சி. இராஜநாயகம் தலைமையில் இந்தவிழா நடைபெற்றது.

தென்மராட்சிவட்டாரங்களிலிருந்தும் 15 பாடசாலைகள் இந்தப் போட்டியில் பங்கு பற்றின. இப்போட்டிகளில் சுமார் 500க்கும் அதிகமான மாணவர் கலந்துகொண்டனர்.

மட்டுவில் மகாவித்தியாலயம், சாவகச்சேரி இந்துக் கல்லூரி, டிறிபேக் கல்லூரி, மகளிர்மகாவித்தியாலயம், வரணி மகாவித்தியாலயம் உட்பட ஏழுபாடசாலைகள் 1-ம், 2-ம், 3-ம் இடங்களைப்பெற்று தெரிவுசெய்யப்பட்டன. (உ)

## கள்ளுக் கொடுக்க மறுத்த சீவல்தொழிலாளிக்குவெட்டு

மாவிட்டபுரம், வியா

கள் இல்லையெனக் கையை விரித்த சீவல் தொழிலாளி ஒருவரை ஐவர் கொண்ட கோஷ்டியொன்று இரவுநேரத்தில் நித்திரையில் வைத்து வாளால்வெட்டியும், கம்பிகள் பொல்லுகளால்தாக்கியும் படுகாயம் விளைவித்ததாகப்புகார் செய்யப்பட்டுள்ளது.

இச்சம்பவம் ஒன்றுதெல்லிப் பழையை அடுத்த வறுத்தலை என்னுமிடத்தில் நடைபெற்றுள்ளது.

அவ்விடத்தைச் சேர்ந்த பொன்னன் செல்லத்துரை (45வயது) என்னும் சீவல் தொழிலாளியிடம் ஏழாலையைச் சேர்ந்த நபர் ஒருவர் கள் தருமாறு கேட்டதாகவும், அவர்கள் இல்லையெனக்கூறியதையடுத்து ஆத்திரமடைந்த அந்நபர் 'செய்கிறேன் பார் லேலை' எனக்கூறிச்சென்றதாகவும், அன்று நடு இரவு 1 மணியளவில் வேறு நால்வருடன் வந்த அந்நபர் சீவல்தொழிலாளியை நித்திரையில் வைத்து வாளால்வெட்டியும்,கம்பிகள், பொல்லுகளால்தாக்கியும் படுகாயப்படுத்தியதாக இச்சம்பவம் பற்றிய விசாரணையில் தெரியவந்துள்ளது.

தலையிலும், கைகளிலும் 5 கத்தி வெட்டுக்காயங்களுக்கிலக்காகிய மேற்படிநபர்தெல்லிப்பழை ஆஸ்பத்திரியில்அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதுபற்றி காங்கேசன்துறை பொலிசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதை யடுத்து பொலிசார் விசாரணையிலீடுபட்டுள்ளனர். (க)

## அத்திபாரக்கல் நாட்டு விழா

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ். கதீஜா மகாவித்தியாலய புதிய மாடிக் கட்டட அத்திபாரக்கல் நாட்டுவிழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் நடைபெறவிருக்கிறது.

குருநாகல் கல்வி அதிகாரி ஜனாப் எம. எம். ஏ. குத்தூஸ் தலைமையில் யாழ். எம். பி. திரு. சி. எக்ஸ். மார்ட்டின் அத்திபாரக்கல்லை நாட்டிவைப்பார்.

பிரதம விருந்தினராக இவ் விழாவில் யாழ். அரசாங்க அதிபர் திரு. டபிள்யூ. ஏ.எல். விஜயபால கலந்து கொள்வார். (உ)

## சன்றைஸ் வெற்றி

சாய்ந்தமருது, வியா

மருதமுனை இமாம் ரூமி இயக்க வளர்ச்சி நிதிக்காக அண்மையில் மருதமுனை மசூர் மௌலானா சதுக்கத்தில் நடைபெற்ற உதைபந்தாட்டக் கண்காட்சிப் போட்டியில் மட்டக்களப்பு சன்றைஸ் உதைபந்தாட்டக் கழகத்தை, மருதமுனை ஈஸ்ட்லங்கா உதைபந்தாட்டக்கழகம் 3 – 2 கோல்களால் வெற்றி கொண்டது.


மிளகாய் பயிர்செய்கிறீர்களா?

அப்படியானல் குருமன் நோயை கட்டுப்படுத்த இன்றே பாவியுங்கள்

BAYER

பொலிமற் எல்.சி 50%

மேற்கு ஜேர்மன் பாயர் ஸ்தாபனத்தின் புதிய தயாரிப்பு, ஒரு சிறந்த சர்வ பூச்சி நாசினி



மேலும் பொலிமற், திரிப்ஸ், அழுக்கணவன், வெண் ஈ, சிற்றுன்னி, போஞ்சி ஈ, தத்துக்கிளி துளை புழுக்கள், ஆகியவற்றை கீழ்வரும் பயிர்களில் திறமாக கட்டுப்படுத்தும்.

- நெல்
- புகையிலை
- காய்கறி
- பயறுவகை
- உருளைக்கிழங்கு
- போஞ்சிவகை
- பூஞ்செடி
- கோப்பி
- திராட்சை
- தோடை
- பருத்தி
- வெங்காயம்

பொலிமற் பயிர்களை ஊக்கமாகவும், திடகாத்திரமாகவும் வளரச்செய்யும்.

பொலிமற் உடன் கெந்தகம் கலக்கப்படாது பயிர்களை பாதுகாக்க தாமதியாது பாவியுங்கள் பொலிமற்,

தயாரிப்பாளர்.

ஹேகெம் லிமிடெட்

400 டீன்ஸ் ரோட் கொழும்பு-10

டெலிபோன் 93563 - 96331

Melville Assaw Designs



சிந்தெட்டிக் கற்பூரம் பெட்டிகளில்

கிடைக்குமிடம்:

சென்ற் அந்தனிஸ் ஹாட்வெயர் ஸ்டோர்ஸ் லிமிட்டெட்

516, ஸ்கின்னர்ஸ் ரோட்டுத் தெற்கு, கொழும்பு-10.

போன்: 24261-5

வெஸ்லி
[மானிப்பாய்]
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
ஜெய்சங்கர்
எங்க பாட்டன சொத்து

நாகமஸ்
(சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி-உஷாநந்தினி
ராஜபார்ட் ரங்கதுரை

ராஜா [யாழ். நகர்]
சிவாஜி - சரோஜாதேவி தங்கவேலு நடித்த
தினசரி 4 காட்சிகள்
இருவர் உள்ளம் (புதிய பிரதி)

RIO (Jaffna) Daily 4 Shows
TONY CURTIS in
COUNT OF MONTE CRISTO
கவுண்ட் ஒப் மொண்டிகிறிஸ்ரோ

வெலிங்டன் இப்பொழுது நடைபெறுகிறது
[யாழ். நகர்] தினசரி 4 காட்சிகள்
முத்துராமன் சுஜாதா
ஸ்ரீகாந்த் மனோரமா
நடித்த
வாழ்ந்து காட்டுகிறேன்

லிடோ போன்: 7693 சிவாஜி — தேவிகா
[யாழ். நகர்] தினசரி 10-30, 2-30, 6-30, 9-45. நடித்த
அன்புக் கரங்கள் (புதிய பிரதி)

ஸ்ரீதர் சிவாஜி (இருவேடம்)
(யாழ்ப்பாணம்) ஜெயலலிதா சுந்தரராஜன்
தினசரி 4 காட்சிகள் நடித்த
பாட்டும் பரதமும்
(ஈஸ்ட்மன் கலர்)

வின்ஸர் அடுத்த வெளியீடு
(யாழ். நகர்) சிவாஜி (இரு வேடங்களில்)
சௌகார் ஜானகி, உஷா நந்தினி,
வி. கே. ராமசாமி, சசிகுமார்
நடித்த
மனிதனும் தெய்வமாகலாம்
(ஈஸ்ட்மன் கலர்)
டைரக்ஷன்: P. மாதவன்
கடைசி] வாரம் தினசரி 4 காட்சிகள்
அபூர்வ ராகங்கள்

8-வது வெற்றி வாரம்!
மனோகரா எம்.ஜி.ஆர் - ராதாசலூஜா
விரப்பா - நிர்மலா
(யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள் நடித்த
இதயக்கனி
(ஈஸ்ட்மன்கலர்)

REGAL (JAFFNA) Daily at
4-45 7-00 & 9-30 P. M. only
LESLIE PHILLIPS in
SOME WILL, SOME WON'T
(Color)

ராணி எம். ஜி. ஆர். - கே. ஆர். விஜயா
நாகேஷ் நடித்த
[யாழ்நகர்] தினசரி 4 காட்சிகள்
நல்ல நேரம்
(புத்தம் புதிய பிரதி)

## தவக்கால நற்சிந்தனை

''வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லோரும் என்னிடத்தில் வாருங்கள்: நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருகிறேன்.

(மத்தேயு 11:28)

மனிதன் பிறந்தது முதல் இறக்கும்வரை தான் செய்த புண்ணியம் பாவங்களின் பயனாக நன்மை தீமைகளில் உழன்று வருகிறான். எனினும் அனைத்து செயல்கள் நடக்கைகள் ஆகிய எல்லாவற்றிலும் பாவமே தலை தூக்கி நிற்கிறது.

உலக வாழ்க்கையிலே மனிதன் தன்னை அறியாமல் செய்கின்ற பாவங்கள் பலவாக இருக்க தெரிந்து செய்கின்ற பாவங்களோ அவற்றிலும் பலவாக இருக்கக்கூடும். முன்னவை சூழ்நிலை காரணமாக ஏற்படுவன. பின்னவை அகங்காரத்தின் மூலம் தோன்றும். ஆணவத்தின் காரணமாகத் தோன்றுவன. சூழ்நிலை மனிதனைத் தவயப்படுத்திச் சிக்கலான இடுக்கண்களில் ஆழ்த்திநிமிர முடியாமல் பாவக் குழியிலே தள்ளுகிறது 'தான்' என்ற ஆணவமாகிய அகங்காரம், நானே எல்லாவற்றிற்கும் ஏகசக்கராதிபதி என்ற செருக்கிலாழ்த்தி, அவ்வெண்ணத்திலிருந்து விடுபெறவொட்டாமல் ஆழ்த்தி அழியவைத்து பாவக்குழியோடு மட்டும் நில்லாமல் மாணக்குழியிலும் தள்ளி மண்மூடிப் புதைக்கிறது.

பாதையில்போகும் வெறிநாயைப் பலர் அடிக்கும்போது அது அடித்தவனை விட்டுமற்றவர் மேலும் பாய்ந்து கடிப்பதுண்டு. நாமே அடிக்க அந்நாய் நம்மீது பாய்வதும் உண்டு. அப்படித் தன் பாவமும் நம்மைப் பின்தொடர்கிறது. சிந்திக்கிறோமா? சிந்தையில் கொள்ளுகிறோமா?

—ஞானஒளி

## 200 புதிய கிராமசேவகர் பிரிவுகள்

கொழும்பு, வியா.

புதிதாக 200 கிராமசேவகர் பிரிவுகள் அமைக்க பொது நிர்வாகஅமைச்சு தீர்மானித்துள்ளது.

இப்போதுள்ள பிரிவுகளில் கடமையாற்றும் கிராமசேவகர்களுக்கு வேலைப்பளு அதிகமாக இருப்பதாலேயே கிராமசேவகர்பிரிவுகளை அதிகரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது. (இ)

## வருடாந்த உற்சவம்

சுழிபுரம், வியா.

பண்ணாகம் மெய்கண்ட விநாயகர் தலை முருகமூர்த்தி கோயில் வருடாந்த உற்சவம் இன்று வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது தொடர்ந்து பத்துத்தினங்கள் திருவிழா நடைபெற்று பத்தாவது தினமான சனிக்கிழமை தேர்த்திருவிழாவும், ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும். அன்று ஸ்ரீ முருகன் அன்னதான சபையாரால் யாவருக்கும் அன்னதானம் வழங்கப்படும். பிரதமகுரு சுழிபுரம் பிரம்மஸ்ரீ ச. சுப்பிரமணியக்குருக்கள் திருவிழா கிரிகைகளை நடாத்திவைப்பார். [இ]

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 2-30, 6-30, 9-45
சனி, ஞாயிறு 10-30
சிவாஜி – பத்மினி
தேனும் பாலும்

"நிர்வாகச் சீர்கேட்டை நீக்கி

## தொழிற்சாலையை மூடும் அபாயத்தைத் தவிர்க்கவும்"

மாவிட்டபுரம், வியா.

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையில் நிலவிவரும் நிர்வாகச்சீர்கேடு காரணமாகத் தொழிற்சாலையை மூடக்கூடிய அபாயத்திலிருந்து காப்பாற்றி நிர்வாகத்தைச் சீர்படுத்துமாறு மேற்படி தொழிற்சாலையைச்சேர்ந்த 6 தொழிற் சங்கங்கள் கூட்டாக கைத்தொழில் மந்திரியிடமும் இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனத் தலைவரிடமும் கோரியுள்ளன.

மேற்படி சங்கங்கள் கூட்டாகச்சேர்ந்து சிமெந்து பொதுத் தொழிலாளர் யூனியன் தலைவர் திரு. கணபதிப்பிள்ளை தலைமையில் நடத்திய விசேட பொதுக்கூட்டமொன்றிலேயே மேற்கண்டவாறு கோரும் தீர்மானம் நிறைவேறியது.

மற்றும் நிறைவேறிய தீர்மானங்கள் வருமாறு:-

பயிற்றப்பட்ட ஊழியர்களுக்கு ஆகக்குறைந்தது 355 ரூபா சம்பளம் வழங்கப்படவேண்டும். சகல தரத்திலுமுள்ள சகலவெற்றிடங்களும் நிரப்பப்படல்வேண்டும். ஒவ்வொரு தொழிற்சாலையின் நிர்வாக வேலைகள் அனைத்தும் அந்தந்தத் தொழிற்சாலையிலேயே செய்யப்படவேண்டும்.

சகல நிரந்தரமற்ற ஊழியர்களும் உடன் நிரந்தரமாக்கப்படவேண்டும். உச்சவரம்புச் சம்பளத்தில்பலகாலம் இருக்கும் ஊழியர்கள் நிலை உடனடியாகப் பரிசீலனைசெய்யப்பட்டு தக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். பிரதானக்கந்தோரில் ஆட்களைமையமாகவைத்து பதவிகளைத் தயாரித்தல் நிறுத்தப்படல்வேண்டும்.

மற்றும் ஓய்வுகால நன்கொடை, வீடுகட்டுப் கடன், சம்பளமாற்றம், புகையிரத ஆணைப்பத்திரம் ஆகிய சம்பந்தப்பட்ட தீர்மானங்களும் நிறைவேறின. (இ)

......

## 9 சுயேச்சைகள் வெற்றி

புதுடில்லி, மார்ச் 24

தேர்தலில் போட்டியிட்ட 1,222 சுயேச்சை அபேட்சகர்களில் 9 பேர் மட்டுமேவெற்றி பெற்றனர்.

71-ம் ஆண்டு தேர்தலில் 1,134 பேர் சுயேச்சையாகப் போட்டியிட்டு 14 பேரும், 67-ம் ஆண்டு 865 பேரில் 25 பேரும் 62ம் ஆண்டு 480 பேரில்20 பேரும் வெற்றி பெற்றனர்என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

......

## இன்று லோகசபை கூடுகிறது

புதுடில்லி, மார்ச். 24

இந்திய 6வது லோக சபையின் முதலாவது தொடர்க்கூடடம் நாளை வெள்ளிக்கிழமை ஆரம்பமாகுமென்று ஜனதாக் கட்சிப் பொதுச் செயலாளர் திரு. கே. எல். அட்வாணிதெரிவித்தார்.

நாளை சனிக்கிழமை சபாநாயகர் தெரிவு இடம்பெறும் என்றும் அவர் தெரிவித்தார். (இ)

......

## தமிழ்மணியின் 25வருடசேவைக்கு கௌரவம்

யாழ்ப்பாணம், வெள்ளி

தமிழ்மணி எஸ். கணேசசுந்தரனின் 25 வருட கால கதாப்பிரசங்கப் பணியைப் பாராட்டி இன்று வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானத்தில் கௌரவிப்பு வைபவம் நடைபெறவுள்ளது. ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளின் திருவிளையாடற் புராண தொடர் விரிவுரையைத் தொடர்ந்து இந்த வைபவம் நிகழும். தமிழ்மணி கணேசசுந்தரன் ஸ்ரீலஸ்ரீ பரமாச்சாரிய சுவாமிகளின் பூர்வாச்சிரம மாணவரும், வண்ணை வைத்தீஸ்வரன் ஆலய ஓதுவாரும் என்பது குறிப்பிடத்தக்கது. 10-ம் திருவிழா இன்று நடைபெறுகிறது. (ஆ)

......

## பல்லாயிரவர் ரசித்த ரோருகீதம்

நல்லூர், வியாழன்

யாழ். லயன் களியாட்டு விழாவில் யாழ்ப்பாணம் ரோரு ஸ்தாபன ஆதரவில் நடைபெற்ற மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி நிகழ்ச்சியின் போதுரோரு ஸ்தாபன கீதத்தை ஸ்தாபன ஊழியர்களான, திரு. எஸ். ஜெகசோதியும், திரு. இமானுவேற்பிள்ளை நாதனும் பாடிய போது பல்லாயிரக்கணக்கான ரசிகர்கள் ரசித்தனர். (அ)

......

## பார்வை...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

தார்.

### கூட்டங்கள் ரத்து

மூதறிஞர் சுகவீனமுற்றதைத் தொடர்ந்து நேற்று வடக்கில் பல இடங்களில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கருத்தரங்குகள், கூட்டங்கள் ரத்துச் செய்யப்பட்டன.

### கோவில்களில் விசேட பூசை

தலைவர் செல்வாவின் உடல் நலனுக்காக வடபகுதியில் உள்ள பல கோவில்களில் விசேட பூசைகள், வழிபாடுகள் செய்ய ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

கும்பழாவளைப் பிள்ளையார் கோவில், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில், சுன்னாகம் சிவன்கோவில் ஆகியவற்றில் விசேட பூசைகளை அளவெட்டி இளைஞர்பேரவையினர் ஏற்பாடு செய்துள்ளனர்,

திருக்கோணமலை, மட்டக்களப்பு, கொழும்பு ஆகிய இடங்களிலிருந்தும் பலர் தொலைபேசி மூலம் மூதறிஞரின் உடல்நிலையை கேட்டவண்ணமிருந்தனர். (க-ஆ)

•••

## நிர்வாகிகள்

அனலைதீவு, வியாழன்

அனலைதீவு நாவலர் சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் காலஞ்சென்ற தமிழ்த் தலைவர்களும் சட்ட மேதைகளுமான அமரர்கள் ஜி. ஜி. பொன்னம்பலம், எம். திருச்செல்வம் ஆகியோரின் மறைவுக்கு மௌனஞ்சலி செலுத்தப்பட்டது.

பின்னர் பின்வருவோர் புது வருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. சு. விஜயகமூர்த்தி, உபதலைவர்: திரு. வ. திருநாவுக்கரசு, இணைச்செயலாளர்கள்: திரு. வே. குகதாசன், செல்வி கௌரி செல்லத்துரை, பொருளாளர்; செல்வன் கண. விஜயகமூர்த்தி, உதவிப்பொருளாளர்: செல்வன் இ. மகாலிங்கம், நிர்வாக அங்கத்தவர்களாக நான்கு பேர் தெரிவுசெய்யப்பட்டனர்.

போசகராக [மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். கே. சிவனடியான் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார். [இ]

ஈழநாடு
The EELANADU

# செல்வாவின் பிறந்தநாளில் விசேஷ பூசைகளுக்கு ஏற்பாடு

## சகலதொகுதி ஆலயங்களிலும் நடக்கும்

யாழ்ப்பாணம், வெள்ளி மூதறிஞர் எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் 80-வது பிறந்த நாளான இம்மாதம் 30ம் திகதி ஒவ்வொரு தொகுதிகளிலும் உள்ள கோவில்கள், தேவாலயங்கள், மசூதிகளில் செல்வாவின் உடல் நலனுக்காக விசேஷ பிரார்த்தனை, ஆராதனை, தொழுகை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருவதாக தமிழர் கூட்டணிப் பிரமுகர் உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் தெரிவித்தார்.

அன்றைய தினத்தில் ஒவ்வொரு தமிழ் பேசும் மக்களும் தந்தை செல்வாவின் உடல் நலனுக்காக ஆண்டவனிடம் வேண்டிக்கொள்ளுமாறு திரு. தர்மலிங்கம் கேட்டுக்கொண்டுள்ளார்.

கோவில்கள், தேவாலயங்கள், மசூதிகளில் நடைபெறும் விசேஷ பூசைகளில் கலந்துகொள்ளுமாறும் அவர் வேண்டுகோள் விடுத்தார். (ஆ)

## ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், வெள்ளி யாழ்ப்பாணத்தில் நாளை நடைபெறவிருந்த தமிழ்க் காங்கிரஸ் கமிட்டி கூட்டம் அடுத்த மாதத்திற்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக காங்கிரஸ் நிர்வாக செயலாளர் திரு. ரி. சங்கரப்பிள்ளை தெரிவித்தார். (க-ஆ)

## குளிரூட்டப்பட்ட அறையில் எஸ். ஜே. வி.

# பார்வையாளர்களுக்கு அனுமதியில்லை

# ஆஸ்பத்திரியில் மக்கள் வெள்ளம்

யாழ்ப்பாணம், வெள்ளி யாழ். பெரியாஸ்பத்திரியில் 15-ம் வார்ட்டில் சிகிச்சை பெற்றுவந்த மூதறிஞர் செல்வநாயகம், சத்திரசிகிச்சைக்குப் பின், 16-ம் வார்ட்டிலுள்ள குளிரூட்டப்பட்ட தனி அறைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இங்கு ''பார்வையாளர்கள் கண்டிப்பாக அனுமதிக்கப்பட மாட்டார்கள்'' என்ற அறிவிப்புப் பலகை தொங்கவிடப்பட்டுள்ளது.

நேற்று நண்பகல் 12 மணிக்கும், பிற்பகல் 5 மணிக்கும் ஆயிரக்கணக்கான மக்கள் 16ம் வார்ட்டிற்கு படை எடுத்தனர்.

டாக்டர்கள், நர்சுகள்மட்டுமே உள்ளே செல்ல அனுமதிக்கப்படுகின்றனர். உறவினர்கள், கூட்டணி தலைவர்கள், ஆதரவாளர்கள் எவரும் உள்ளே செல்ல அனுமதிக்கப்படவில்லை.

கூட்டணி தலைவர்கள் அடிக்கடி வந்து, நிலைமைபற்றி ஆராய்ந்து செல்கின்றனர். இளைஞர் பேரவையினரும் அடிக்கடி வந்து நிலைமையை அறிந்துகொண்டிருந்தனர்.

### பதிவுப் புத்தகம்

16ம் வார்ட்டிற்கு வெளியில், ஒரு பதிவுப் புத்தகம் ஒன்று வைக்கப்பட்டுள்ளது. மூதறிஞர் செல்வநாயகத்தின் உடல் நிலையை நேரில் அறிந்துகொள்ள வருபவர்கள், அந்தப் புத்தகத்தில் பெயர், விலாசத்தை எழுதிச் செல்கின்றனர்.

மூதூர், மட்டக்களப்பு, பட்டிருப்பு, கல்முனை, கற்குடா, திருமலை ஆகிய தொகுதிகளிலிருந்து நூற்றுக்கணக்கான இளைஞர்கள் நேற்று வந்து சேர்ந்தனர். அவர்கள் நேற்று மாலையும், ஆஸ்பத்திரியில் காணப்பட்டனர்.

### குமார் வந்தார்

தமிழ்க் காங்கிரஸ் வாலிப முன்னணி தலைவர் திரு. குமார் பொன்னம்பலம் நேற்றுக் காலை யாழ்ப்பாணம் வந்து சேர்ந்து உடனடியாக ஆஸ்பத்திரிக்குச் சென்று மூதறிஞரின் உடல் நிலை பற்றிக் கேட்டறிந்து, அங்குள்ள பதிவுப் புத்தகத்திலும், முதலாவதாகக் கையெழுத்திட்டார்.

### திருமலை எம். பி. வந்தார்

திருகோணமலை எம். பி. திரு. ப. நேமிநாதனும், மற்றும் திருமலையிலிருந்து வந்த ஆதரவாளர்களும் நேற்று வந்து நிலைமைபற்றி அறிந்து சென்றனர்.

### சிறிது முன்னேற்றம்

சத்திர சிகிச்சைக்குப் பின் அவரின் உடல் நிலையில் சிறிது முன்னேற்றம் காணப்படுவதாகவும், இன்னும் மயக்கம் தெளியாத நிலையிலேயே இருக்கிறாரென்றும், ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

### கவிஞர் காசி வந்தார்

கடந்த ஒரு வாரமாக, தொடர்ந்து கருத்தரங்கு கூட்டங்களில், இரவு பகலாகக் கலந்துகொண்ட கவிஞர் காசி ஆனந்தன், கடும் காய்ச்சலினால் பாதிக்கப்பட்ட நிலையிலும், நேற்று ஆஸ்பத்திரிக்கு வந்து, மூதறிஞரின் உடல் நிலைமைபற்றி அறிந்து சென்றார்.

## கூட்டம் பற்றி இன்று முடிவு

நாளை மறுதினம் யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் நடைபெறவிருந்த கூட்டணி கூட்டத்தை நடத்துவதா? இல்லையா என்பது பற்றி இன்று முடிவு செய்யப்படும் என்று யாழ். தொகுதி கூட்டணி அமைப்பாளர் திரு. வி. யோகேஸ்வரன் தெரிவித்

(7ம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதியும், சிறிமாவும் மொரார்ஜிக்கு வாழ்த்து

கொழும்பு, வியாழன் இந்தியாவின் புதிய பிரதமராகப் பதவியேற்றுக்கொண்டுள்ள திரு. மொரார்ஜிதேசாய்க்குஜனாதிபதி திரு. வில்லியம் கோபல்லாவும் பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவும் வாழ்த்துச்செய்திகள் அனுப்பிவைத்துள்ளனர்.

அணிசேரா கொள்கையைத் தொடர்ந்து கடைப்பிடிக்கப் போவதாக மொரார்ஜி தேசாய் கூறியிருப்பதை இவர்கள் வரவேற்றுள்ளனர்.

முன்னைய அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கொள்கைகளில் மாற்றம் ஏற்படுத்தப்படமாட்டாது என்று புதிய பிரதமர் மொரார்ஜிதேசாய் கூறியிருக்கிறார்.

### மந்திரிகள் விபரம்

புதிய அரசாங்கத்தின் ஒரு சில மந்திரிகள் விபரம் நாளை (வெள்ளி) அறிவிக்கப்படும் என்றும் ஏனைய மந்திரிகள் விபரம் அடுத்த சில தினங்களில் அறிவிக்கப்படும் என்றும் பிரதமர் மொரார்ஜிதேசாய் தெரிவித்தார், (ஆ)

## சுவீப் முடிவுகள்

கொழும்பு, வியாழன் இன்று மருதானையில் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட 608-வது இலக்க சுவீப் சீட்டிழுப்பில் முதல் 3 பரிசு பெறும் டிக்கட்டுகள் விபரம் வருமாறு:—

1-வது பரிசு
**26 N 0361**
**1 லட்சம்**

2-வது பரிசு
**17 X 0833**
**40 ஆயிரம்**

3-வது பரிசு
**03 C 0204**
**10 ஆயிரம்**

## இந்திய

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மொரார்ஜி தேசாயை கட்சித் தலைவராக ஏகமனதாகத் தெரிவுசெய்தனர்.

### ஜெயப்பிரகாசருக்கு விசேட அதிகாரம்

காலைகூடிய மூன்று கட்சிகளையும் சேர்ந்த உறுப்பினர்கள் தலைவர் தெரிவில் தமக்கு ஆலோசனை வழங்குவதற்கான முழு அதிகாரங்களையும் சர்வோதயத் தலைவர் திரு. ஜெயப்பிரகாஷ் நாராயணுக்கும் ஆச்சார்யகிருபளானிக்கும் வழங்கியிருந்தனர்.

இவ்விஷயத்தில் இவர்கள் இருவரினதும் ஆலோசனைகளுக்குத் தாம் கட்டுப்படுவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

ஜனதா கூட்டணியின் தலைவராக திரு.மொரார்ஜிதேசாய் தெரிவுசெய்யப்பட்டு பிரதம மந்திரியாவார் என்றும் காங்கிரஸ் ஆட்சிமன்றக் குழுவின் தலைவராக முன்னாள் வெளிவிவகார அமைச்சர் திரு. வை. பி. சவான் தெரிவு செய்யப்படுவார் என்றும் 'ஈழநாடு' ஏற்கனவே தெரிவித்திருந்தது தெரிந்ததே.

### ஜெகஜீவன் வரவில்லை

ஜனதாகட்சித்தலைவர் தெரிவின் போது ஜனநாயக காங்கிரஸ்கட்சியின் தலைவர் திரு. ஜெகஜீவன்ராம் பிரசன்னமாய் இருக்கவில்லை.

ஆனால் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள திரு தேசாய்க்கு திரு. ஜெகஜீவன்ராம் தம் பாராட்டுக்களை பின்னர் தெரிவித்துக்கொண்டார்.

தலைவர் தெரிவின் போது திரு. ஜெகஜீவன்ராம் வராது போனது குறித்து திரு.தேசாய் கவலை தெரிவித்தார்.

### தனியாக இயங்கும்

ஜனநாயக காங்கிரஸ் கட்சி தொடர்ந்தும் தனிக்கட்சியாகவே இயங்கிவரும். ஆனால் ஜனதாகட்சியின் திட்டங்கள் நிறைவேற முழுஒத்துழைப்பும் கொடுத்துவரும் என்று திரு. ஜெகஜீவன்ராம் ஓர் அறிக்கையில் கூறியிருக்கிறார்.

# அமிரின் கருத்தை இராசதுரை ஏற்றார்

யாழ்ப்பாணம்,வெள்ளி ''காண்டீபன் இங்கிலாந்தில் இருந்து நாடு கடத்தப்படும் நிலை ஏற்பட்டபோது அவரை நாடு கடத்தாது அவருக்கு அரசியல் பாதுகாப்பு அளிக்குமாறு இங்குள்ள தமிழ் ஆட்சி மன்ற உறுப்பினர்களும் பிரித்தானிய உள்நாட்டு அமைச்சுக்கு வேண்டுகோள் விடுத்தபோது நானும் அவ் வேண்டுகோளுக்கு ஆதரவளித்தேன் என்றுதான் மட்டக்களப்பு வரவேற்பில் பேசினேன்'' என்று மட்டக்களப்பு முதல் எம். பி. திரு. செ. இராசதுரை வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில்தெரிவித்திருக்கிறார்.

'காண்டீபன் இங்கிலாந்தில் இருநது நாடு கடத்தபடும் நிலை ஏற்பட்டபோது அவரை நாடு கடத்தாது அவருக்கு அரசியல் பாதுகாப்பு அளிக்குமாறு கோரப்பட்டதே தவிர அவருக்கு மன்னிப்பு அளிக்குமாறு கோரப்படவில்லையென்று திரு. அமிர்தலிங்கம் தெரிவித்துள்ளது சரியானதே'' என்றும் திரு. இராசதுரை எம். பி. தமது மேற்படி அறிக்கையில் கூறியிருக்கிறார். (உ)

## பத்திரிகைகள் பைசிக்கிள் மூலம் டிலிவரி செய்பவர்களுக்கு

தினபதி—சன்—தவச மற்றும் வெளியீடுகள் மிக அண்மையில் வெளிவர இருக்கின்றன. முன்னுடியே எம்முடன் தொடர்பு வைத்திருந்தவர்கள் மீண்டும் உடனடியாக எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

**வே. வன்னியசிங்கம்**
தமிழ்ப்பண்ணை
193, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
5781

## அவசர சத்திர—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சிறிது உரத்ததொனியிலும் பேசக்கூடுமென்றும் வைத்திய நிபுணர்கள் அபிப்பிராயம் தெரிவித்ததாக கூட்டணிப் பிரமுகர்கள் தெரிவித்தனர்.

நேற்றிரவு முதல் இன்று காலைவரை 15ம் வார்ட்டின் உள்ளேயும் வெளியேயும் கூட்டணித் தலைவர்களும், தொண்டர்களும், இளைஞர் பேரவையினரும் கவலை தோய்ந்த முகத்துடன் காணப்பட்டனர். சத்திரசிகிச்சை வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டுவிட்டதென்றும் இனிஆபத்தில்லையென்றும் தெரிவிக்கப்பட்டபோதுதான் அவர்கள் நிம்மதியாகப் பெருமூச்சுவிட்டார்கள்.

### காலை 5 மணிக்கு மீண்டும் வார்ட்டுக்கு

சத்திரசிகிச்சைத் தியேட்டரிலிருந்து திரு.செல்வநாயகம் காலை 5மணிக்கு 15ம் வார்ட்டுக்குக் கொண்டுவரப்பட்டார். பார்வையாளர்கள் எவரும் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

சத்திரசிகிச்சை செய்தபின் காலை 6 மணிக்கு மூன்றுவைத்திய நிபுணர்களும் கொழும்பு திரும்பினர்.

## மரண அறிவித்தல்

'ஓல்ட்பாக்'
**எஸ். நடராசா**

ஓல்ட்பார்க்எஸ். நடராசா காலமாகிவிட்டார். இவர் இரத்தினேஸ்வரியின் அன்புக் கணவரும், பத்மாசனி (கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்), பத்மினி ஆகியோரின் அருமைத் தந்தையும் இரத்தினத்தின் (Navy P. O) தமையனும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 108, கண்டி வீதி, அரியாலையிலுள்ள இவரது இல்லத்திலிருந்து தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி மயானத்திற்கு இன்று (25-3-77) பிற்பகல் 4 மணிக்கு எடுத்துச்செல்லப்படும்.

5787 தகவல்: குடும்பத்தினர்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு மார்ச் மாதம் 25-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanadu P. O. Box 49, Jaffna) Telegram: Eelanadu. Telephone 389. Registered as a Newspaper in Sri Lanka.